ஸ்ரீ:

கதைக்கொத்து

மலர் 2

இஃது
அகநானூற்றுப் பதிப்பாசிரியரும்,
சங்கசிந்தாமணி ஆசிரியருமான

வே. இராஜகோபாலையங்கார்

எழுதியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை:
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
1928

காபிரைட்] [விலை 4 அணா

உள்ளுறை

எண் விஷயம் பக்கம்

ஆத்திசூடி

1. திருமாலுக் கடிமை செய் ... 1
2. ஆறுவது சினம் ... 3
3. இயல்வது கரவேல் 5
4. ஈவது விலக்கேல் ... 7
5. உடையது விளம்பேல் 10
6 ஊக்கமது கைவிடேல் 11
7. ஐயமிட் டுண் ... 13
8. ஒப்போல் வளை ... 15
9. சோம்பித் திரியேல் 16
10. ஞயம்பட உரை ... 17
11. தூக்கி வினை செய் 19
12. தெய்வ மிகழேல் ... 20
13. நன்றி மறவேல் ... 22
14. புகழ்பட வாழ் ... 24
15. பெரியாரைத் துணைக் கொள் ... 25
16. மனந் தடுமாறேல் 27
17. மாற்றானுக்கு இடங் கொடேல் ... 28
18. மிகைபடச் சொல் லேல் ... 30
19 வஞ்சகம் பேசேல் 33
20. வல்லமை பேசேல் 34
21. வித்தை விரும்பு ... 35
22. உத்தமனா யிரு ... 38

கொன்றை வேந்தன்

23. ஊருடன் பகைக்கின் வேருடன்கெடும் 41
24. எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் 43
25. கீழோராயினும் தாழ வுரை ... 45
26. மூத்தோர் சொல்லும் வார்த்தை அமிர் தம் ... 47

வெற்றி வேற்கை

27. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங் குதல் ... 49
28. மன்னவர்க்கு அழகு செங்கோன் முறைமை ... 52
29. மந்திரிக் கழகு வரும் பொருளுரைத் தல் ... 54
30. தந்திரிக் கழகு தறுக ணாண்மை ... 57
31. குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல் ... 59
32. அறிவோர்க் கழகு கற் றுணர்ந் தடங்கல் 63

PREFACE

At this time of day when the vernaculars have received a fresh impetus, any elaborate apology for bringing out this volume is superfluous. There cannot at present be too many of good Tamil books. On the contrary there is a clamorous cry for good readable books in Tamil. The great Tamil classics address themselves to the learned few, and the general reader has no good books to take to.

This booklet proposes in its own humble way to meet this want. Written in simple easy flowing style the book scrupulously avoids all slang on the one hand, and learned pedantry on the other. It is chiefly intended to be used in schools in the Fourth Standard as *Supplementary & Story Reader* and the stories have been accordingly carefully graduated, the language employed is always homely, never lapsing into coarseness and vulgarity.

The stories selected are of such a nature that they cannot fail to arouse interest and engage the attention of the youths. Another interesting feature of the book is that a neat smart quotation from Athisudi, Kondrai Vendone and Vettri Verkai leads off every story, and holds in little the essence and moral of the whole.

This is intended to be the Third of the Stories for Moral Instruction Series in Tamil. Any emendations and suggestions proposed will be most thankfully accepted.

'KAMBAR VILAS,'
15th Nov., 1928. } V. R.



"முயற்சி திரு அளிக்கும்"

ஸ்ரீ:

கதைக்கொத்து

மலர் 2

1. 'திருமாலுக்கு அடிமைசெய்'

பூர்வகாலத்தில் மிகவும் நல்லவனான ஒரு பிராமணன் இருந்தான். அவன் எக்காலமும் கடவுளை நினைத்து, அவரை வணங்குவதும், புகழ்வதுமாக இருப்பான். அதனால் அவனுக்கு ஒரு நாளும் துன்பம் வருவதில்லை. அப்படி வந்தாலும், அஃது ஒரு நொடியில் நீங்கிவிடும்.

ஒருகால், அவன் ஒரு காட்டின் வழியே ஓர் ஆற்றங் கரைமேல் சென்றுகொண்டு இருந்தான். அப்பொழுது ஒரு புலி புதரில் இருந்து திடீரென்று கிளம்பி, அவன்மேல்

பாயப் போயிற்று. அதுகண்ட பார்ப்பான் நடுநடுங்கி, ஆற்றில் குதித்துத் தப்பிப் போக லாம் என்று திரும்பினன். திரும்பவே, நீரி லுள்ள ஒரு முதலே வாயைத் திறந்து கொண்டு, அவனே விழுங்கும்போல இருப்ப தைக் கண்டான்.



என்ன செய்வான் பிராமணன்! ஒரு வழி யும் போகமாட்டாமல் தபித்தான். பகவானைத் தியானஞ் செய்தான்; 'கடவுளே! நீரே கதி!' என்று மண்மேல் குப்புற விழுந்தான். கடவுள் அவன் பிரார்த்தனையைக் கேட்டார்; அவனேச் காக்கத் திருவுளங் கொண்டார்; உடனே அப் புலியைப் பிராமணன் விழுந்த க்ஷணத்தில்

பாயும்படி செய்தார்; செய்யவே, அப் புலி விழுந்த பிராமணன் தலைக்கு மேலாகப் பாய்ந்துபோய் விட்டது! பார்ப்பான் அதன் கைக்கு அகப்படவில்லை. அதுவோ பாய்ந்த வேகத்தால் ஆவெனத் திறந்த வாயுடன் இருந்த முதலையின் வாயில் விழுந்தது.

முதலையோ பல நாளாகப் பட்டினி. ஆதலால் அது புலியை விடவில்லை. புலியும் மிக்க மூர்க்கத்துடன் அதைக்கடித்துக் கிழித்தது. இப்படியாக இரண்டுக்கும் கொடிய போராட்டம் உண்டாயிற்று. கடைசியில் இரண்டும் மாண்டன. தெய்வபக்தியுள்ள பார்ப்பான் கடவுள் அருளால் பிழைத்தான்.

2. 'ஆறுவது சினம்'

ஒரு காட்டில் ஒரு சிங்கம் இருந்தது. அஃது ஒரு நாள் தன் குகையில் படுத்து நித்திரை செய்தது. அப்பொழுது அங்கு ஓடிய ஓர் எலி அறியாமல் அச் சிங்கத்தின் முகத்தில் பீறிவிட்டது.

அதனால் சிங்கம் விழித்துக்கொண்டது. தன் நித்திரையைக் கெடுத்த பிராணி யாது என்று, அது தேடிப் பார்த்தது. பார்க்கவே, எலி என்று அறிந்துகொண்டு, அதைப் [illegible]வக் கொல்லப் போயிற்று.

ஆயினும், தன் பெருமையையும் அவ் வெலியின் சிறுமையையும் எண்ணிப் பார்த்தது. 'சீ! இந்த அற்பப் பிராணியையா நாம் கொல்வது? சிங்கங்கள் எலி பிடிப்பதுண்டோ? பூனைகளுக் கல்லவோ அது தொழில்?' என்று நினைத்துக் கோபமாறிற்று. 'எலியே! அஞ்சாதே; போ' என்று, நல்ல முகத்துடன் அதை அனுப்பிவிட்டது.



சில நாளைக்குப் பிறகு அச்சிங்கம் வேட்டை யாடப் போனவிடத்தில், ஒரு வலையில் சிக்கிக் கொண்டது. அதிலிருந்து மீள அது தன்னாலானமட்டும் முயன்றது. என்ன முயன்றும், கூடாமல் போயிற்று. அதனால், அது மிகுந்த கோபமுற்று, மிக்க பலமாகக் கர்ச்சித்தது.

இந்தக் கர்ச்சனை முன்னம் இச் சி திணால் கொல்லாது விடப்பட்ட எலியின்

விழுந்தது. விழவே, அஃது உடனே வளையினின்றும் கிளம்பிச் சத்தம் கேட்டவழி சென்றது. சென்று, சிங்கம் படும் துன்பத்தைக் கண்டது. உடனே அஃது அவ் வலையைத் தன் கூரிய பற்களால் துண்டு துண்டாகக் கடித்து அறுத்து, சிங்கத்தை விடுவித்தது.

அச் சிங்கம், 'தாம் முன்பு கோபத்தை அடக்கிக் கொண்டதன் பயன் இது' என்று எண்ணிக்கொண்டது. பின்பு தன் கோபத்தை அடக்கிக்கொண்டு அது சுகித்து, வாழ்ந்தது.

3. 'இயல்வது கரவேல்'

கல்வியிற் பெரியவர் கம்பர் அல்லவா? அவர் ஒரு காலத்தில் நடுப்பகலில் பிரயாணம் போய்க்கொண்டு இருந்தார். அப்பொழுது சூரிய உஷ்ணத்தாலும் பசியினாலும் மிகவும் களைத்துப் போனார். பக்கத்தில் ஒரு பெரிய மரம் தென்பட்டது. அம் மரத்து நிழலிலே சென்று, அவர் படுத்துக்கொண்டார்.

அங்கே பக்கத்து வயலிலே ஓர் உழவன் உழுது கொண்டு இருந்தான். அவனுக்கு அவன் மனைவி கஞ்சி கொண்டு வந்தாள். குடியானவன் உழுவதை நிறுத்திவிட்டு, கம்பர் படுத்திருந்த மரத்தடியில் வந்தான். அக் கஞ்சியை எடுத்துக் குடிக்கப் போனான்.

கம்பர் அதைப் பார்த்தார். அவருக்கு மிக்க பசியாக இருந்தது. அதனுல், அவர் தமக்கும் சிறிது கஞ்சி ஊற்றும்படி அவனை வேண்டினுர். உடனே அந்த இரக்க முள்ள குடியானவன் தன் கஞ்சிக் கலயத்தைக் கம்பர் கையில் அன்புடன் கொடுத்தான். உண்ணும் படி உபசரித்தான். புலவர் குடித்துச் சிறிது களை ஆறினுர். உழவன் மிகுந்திருந்த சிறிது பாகத்தைக் குடித்துத் திருப்தி அடைந்தான். நமது கவிச் சக்கரவர்த்திக்கு நிரம்ப சந்தோஷம் உண்டாகிவிட்டது. உழவனை அவர், 'நீ சுகமாக வாழ்க' என்று வாழ்த்தினுர்.

பிறகு உழவன் முன்போல வயலில் இறங்கி உழத்தொடங்கினுன். அப்போது அவன் கலப்பையின் கொழு, பூமியிற் புதைக்கப் பெற்றிருந்த ஏதோ ஒன்றின்மேற் பட்டது. உடனே 'விண்' என்று ஓர் ஓசை உண்டாயிற்று. உழுநன் அஃது என்ன என்று சோதித்தான். சோதிக்கவே, அது பொன்னும், வெள்ளியும் நிறைந்த ஒரு வெண்கலப் பானையாக இருந்தது.

உடனே அவன் அதை எடுத்து ஓடிவந்து, கம்பர் முன்னே வைத்தான்; 'பெரியவரே! உமது அருளால் இஃது எனக்குக் கிடைத்தது. நீர் இதில் ஒரு பாதியை எடுத்துக்கொள்ளும்' என்றுன். கம்பர் அவனுக்கு உபசாரம்

சொல்லி, 'அப்பா! நீ கூடிய மட்டில் ஒளியாமல், பிறருக்கு அன்னம் அளித்துவந்தாய்; அதனல் கடவுள் இதை உனக்கு அளித்தார். நீ வைத்துக்கொண்டு சுகித்திரு' என்று ஆசீர்வதித்துப் போய்விட்டார். தன்னுல் கொடுக்கக் கூடியதை ஒளியாது நல்லோர்க்குக் கொடுத்த உழவன் பணக்காரன் ஆனுன்.

4. 'ஈவது விலக்கேல்'

ஓரூரில் பெரும் பணக்காரனுன ஒரு கோமுட்டி இருந்தான். அவன் ஏழைகளுக்குப் பொருள் கொடுத்து உபகாரஞ் செய்யும் இரக்க குணமுடையவன். அவனுக்கோ ஒரு கொடிய மனைவி யுண்டு. அவள் தன் கணவனை அவ்வாறு தான தருமஞ் செய்ய ஒட்டாதபடி தடுத்துக்கொண்டுவந்தாள். அதனுல் அவன் தன் மனைவி அறியாமல் ஏழைகளுக்கு ஏதாவது பொருள் கொடுத்து உதவிசெய்து வந்தான்.

அவனுக்குச் சமர்த்தனுன ஒரு மகன் உண்டு. அவனிடத்தில் அக் கோமுட்டிச்சிக்கு அதிக விசுவாசம். அச் சிறுவன் வியாபார நிமித்தம் சரக்குகளுடன் கப்பலேறித் தீவாந்தரம் போயிருந்தான். நிரம்பப் பொருளோடு திரும்பி வந்தான். வரும்போது நடுக்கடலில் க்ப்ப லுடைந்துபோய்விட்டது. அவன் மாத்

திரம் பிழைத்தான். ஒரு மரத் துண்டைக் கட்டிக்கொண்டு இரண்டு நாள் சோறு இல்லாமல் தபித்தான். அதன் பிறகு, ஒரு கப்பல் வந்தது. அவனை எடுத்து ஒரு தேசத்தில் கொண்டு போய்விட்டது.

அங்கு அவன் கைப் பொரு ளில்லாமையால் கூலி வேலை செய்து ஜீவனம் செய்யும்படி ஆயிற்று. கால் நடையாகவே நடந்து, தன் தேசம் வரும்படியும் நேர்ந்தது. பல காததூரம் நடந்து கடைசியாகத் தன் ஊர் வந்து சேர்ந்தான். மெல்ல நகர்ந்துகொண்டு தன் வீட்டு வாசலை அணுகினான். அங்குத் தன் தாயும், தந்தையும் நின்றுகொண் டிருக்கக் கண்டான். 'அம்மா! அம்மா! ஒரு வயிற்றுச் சோறு!' என்று அலறிக்கொண்டு விழுந்தான்.

அவன் உடம்பு கறுத்தும், இளைத்தும், ஆடை அழுக்கடைந்தும், கிழிந்தும் இருந்தமையால், பெற்றோரும் அவனை அடையாளம் காணக் கூடவில்லை. ஆயினும் கோமுட்டி அவனை யாரோ வழிப் போக்கன் என்று நினைத்து இரங்கி, தன் மனைவியைச் சோறு கொண்டு வந்து போடும்படி வேண்டினான். அவளோ மிகக் கோபித்து, 'வழியே போகிற வீணர்களுக் கெல்லாம் இங்கு என்ன வேலை?' என்று அதட்டினாள்.

அவ் வார்த்தை காதில் விழுந்ததும் சிறுவன் ஏங்கி மூர்ச்சித்துவிட்டான். கோமுட்டி பெரிதும் இரங்கி, அவனிடம் ஓடி, அவனை வாரியெடுத்தான். அப்போது அச் சிறுவன் மடியினின்றும் ஒரு சீட்டு விழுந்தது. அதை அவன் படித்துப் பார்க்கவே, தன் மகன் அவன் என்று தெரிந்துகொண்டான்.

உடனே, அவன், 'ஆ! ஆ! மகனே! மகனே!' என்று அலறினன். உடனே கோமுட்டிச்சியும் அருகில் வந்து பார்த்தாள். தன் மகன்தான் என்று அறிந்து கொண்டாள். 'ஐயோ! உன்னைக் கொன்றுவிட இருந்தேனே!' என்று அவள் வாயிலும், வயிற்றிலும் அறைந்து கொண்டாள். உடனே உள்ளே ஓடிச் சென்று சோறு கரைத்து வந்து, தன் மகன் வாயில் ஊற்றினள். சிறுவன் குடித்து, சிறிது மூர்ச்சை தெளிந்தான்.

அப்பொழுது கோமுட்டி, 'ஓ! ஓ! நீ என்னைப் பிறருக்கு ஈயவொட்டாமல் விலக்கி வந்தாயே! இப்பொழுதும் நீ விலக்கி யிருந்தால், நம் குடும்பம் எவ்வாருகிவிடும்! ஒரே மகனை இவன் இறத்துபோயிருப்பானே! பிறகு நீயும், நானும் எப்படி உயிர் வாழ்வது? நான் கொடுப்பதை நீ இத்தனை நாளும் விலக்கிவந்த பாபத்தினல்தான் உன் மகன் உடுக்கவும், உண்ணவும்

இன்றி, அயல் நாட்டில் வருந்தினன்' என்று சொல்லிப் புலம்பினன். பின்பு கோமுட்டிச்சியும் தயை உள்ளவளாகிச் சுகமடைந்தாள்.

5. 'உடையது விளம்பேல்'

ஒரு நரி ஓர் ஆட்டுக்குட்டியைத் திருடிக் கொண்டு ஓடுகையில், ஒரு கண்ணியில் அகப்பட்டுக்கொண்டது. கண்ணி அதன் காலை இறுக்கிப் பிடித்துக்கொண்டது. கொள்ளவே, நரி, 'ஐயோ! நான் என்ன செய்வேன்? இந்தச் சமயத்தில் எனக்கு யார் உதவி செய்வார்?' என்று அலறிற்று.

இவ்வாறு அலறுகையில், ஆங்கு ஓர் ஓநாய் ஓடுவதைக் கண்டது. உடனே அதை, 'அண்ணே! அண்ணே! என்று கூப்பிட்டது. அது கிட்டி வந்ததும், 'ஐயா! என் காலை அவிழ்த்து விடுமே! உமக்குப் புண்ணியமுண்டே?' என்று கெஞ்சிற்று.

அதற்கு ஓனய், 'தம்பீ! இதில் நீ எப்படிச் சிக்கிக்கொண்டாய்?' என்று கேட்டது. நரி 'இது துஷ்டப் பிராணி; இதனிடத்து இரகசியத்தைச் சொல்லக் கூடாது' என்று நினைக்கவில்லை. தான் ஆடு திருடிய பெருமையைச் சொல்லி, அவ் வாட்டையும் காட்டிற்று.

உடனே ஓநாய், 'தம்பி! எனக்கு உன் காலை அவிழ்த்து விடத் தெரியாது. ஆனால் உனக்கு நோவாமல் உன் ஆட்டைச் சுமந்து கொண்டு போகத் தெரியும்' என்று ஆட்டுக் குட்டியைப் பிடுங்கிக்கொண்டது. நரியைக் கண்ணியிலேயே விட்டுவிட்டு, ஓடிப் போய்விட்டது.

நரி, 'ஐயோ! துஷ்டரிடத்தில் உடையது ஒன்றைச் சொல்லக் கூடாதென்பதை மறந்தேனே! பெருமை பாராட்டியுங்கொண்டேனே! அதனால் இதோ துன்பப்படுகிறேனே' என்று சொல்லி, புலம்பிற்று. அப்போது, நல்ல வேளையாக அந் நரியின் தோழனான வேறொரு நரி அங்கு வந்தது. அது அதனை வலையினின்றும் நீக்கிவிட்டது. அதன் பிறகு, அந் நரி உள்ள இரகசியத்தைப் பிறர்க்கு வெளியிடக் கூடாதென்றும், பெருமை பாராட்டிக்கொள்ளக் கூடாதென்றும் தெரிந்துகொண்டது.

6. 'ஊக்கமது கைவிடேல்'

கவிச் சக்கரவர்த்தி என்ற பட்டப் பெயரைப் பெற்ற கம்பர் சாதியில் ஒரு பூசாரியாவார். அவர் இளமையில் 'மும்மணிக்கோவை' என்ற ஒரு நூலை இயற்றினார். அவர் அதை அரங்கேற்ற வெண்ணி, எல்லாப் புலவரையும் வருவித்தார். அவர்கள்முன் அதைப் படித்துப் பொருள் கூறினார்.

அப்புலவருள் தாதன் என்று ஒரு புலவன் இருந்தான். அவன் சாதியில் வாணியன். அவன் கம்பருடைய நூலில் முதற்பாட்டைக் கேட்டவுடன் கலகல வென்று கை கொட்டி நகைத்தான்! 'ஓ! பூசாரிக் கம்பா! நீ கோயிலில் முக்காலமும் அடிக்கும் மணியின் ஓசை அறிவாயே ஒழிய, 'மும்மணிக் கோவை' பாட அறிவையோ? உன் நூலில் முதற்பாட்டில் முதற் சீர் பிழை' என்ருன். மற்ற வித்துவான்களும் பாடல் பிழையா யிருத்தலை நோக்கிக் கம்பரை இகழ்ந்தனர்.

கம்பருக்கு உண்டான துக்கத்திற்குப், ரோஷத்திற்கும் அளவே இல்லை! அவர் உடனே தாம் பூசைசெய்யும் காளி கோயிலுக்குப் போனுர். அங்குத் தமது உயிரை விட்டுவிடுவது என்று தீர்மானித்தார். ஆனுல், அது அவருக்கு இழிவாகத் தோன்றிற்று; கையால் ஆகாதவன் அன்ருே தற்கொலை புரிந்து கொள்ள எண்ணுவான்? நாம் எல்லாக் கலைகளையும் கற்போம்; கவிச் சக்கரவர்த்தி என்று பேர் வாங்குவோம். அப்படி ஒரு பட்டம் வாங்காதவரையில் உட்கார்ந்து உண்பதில்லை' என்று உறுதி பண்ணிக்கொண்டார்.

நான்கு வருஷகாலம் அவர் நின்ற நிலையிலேயே சோறு தின்ருர். எக்காலமும் படிப்

பதும், கவி பாடுவதும், வித்வான்களுடன் பழகுவதுமாகக் காலங்கழித்தார்; கடைசியில் பெரும் புலவரானார்.

அந் நாடு முழுவதும் அவரை மகா வித்வான் என்று புகழ்ந்தது. அவருடைய கல்வித் திறமை சோழ வரசன் காதிற்கும் எட்டிற்று. அவன் கம்பரை வருவித்தான். இராமாயணத்தைத் தமிழிற் பாடும்படி வேண்டினான்.

இளம் பிராயத்தில் முதற் கவியில் முதற் சீரிலே பிழைபடப் பாடியவ ரல்லரோ கம்பர்! இப்போது அவர் 'எத்தேயத்தும் எப்பாஷையினும் கம்பராமாயணம் போன்ற நூலில்லை' என்று, கற்றோ ரனைவரும் மெச்சிப் புகழ்கின்ற கம்பராமாயணத்தைப் பாடினார். 'கவிச் சக்ரவர்த்தி' என்ற கீர்த்திப் பட்டமும் பெற்றார். கம்பரது ஊக்கத்தைப் பார்த்தீர்களா! நீங்களும் அப்படி ஊக்கமுடையவர் ஆகவேண்டும்.

7. 'ஜயமிட் டேண்'

ஒரு தோட்டக்காரன் ஒரு மாம்பழ மூட்டையைக் கட்டிவைத்துப் போயிருந்தான். அப்போது அங்கு ஒரு வாலிபன் அவன் தன் நண்பர்களோடு வந்தான். அவன் அம் மூட்டையைக்கண்டு அதை உடனே தூக்கிக் கொண்டு மரத்தின்மீது ஏறியிருந்து தின்றான்.

அதை மற்ற வாலிபர் கண்டனர்; உடனே அவரும் மரத்தில் ஏறிவந்து, தங்களுக்கும் தரும்படி வேண்டினர். இவ் வாலிபன் அவர்களுக்கு ஒன்றும் கொடாமல், கொம்புக்குக் கொம்பு தாவி ஏறினான். ஏறுகையிலேயே தான் தின்ற பழத்தின் கொட்டையால் தன்னைத் தொடர்ந்துவரும் நண்பர்களை அடித்து வருத்தினான்.

ஆனால், அவ் வாலிபர்களோ இவனை விடாமலே துரத்திப் போயினர். இவனோ எறிவதற்குக் கொட்டைகள் இல்லாமல், முழுப் பழங்களையே எடுத்து எறிந்தான்.

இவ்வாறு அவன் ஒவ்வொரு பழமாக விட்டெறியவே, கடைசியாக மூட்டையில் ஒரு பழமும் மிஞ்சாமற் போயிற்று. இதைக் கண்ட இவன் 'ஐயோ! எனக்கு ஒன்றும் கிடையாமற் போயிற்றே! முதலிலேயே என் தோழர்களுக்குச் சிறிது கொடுத்திருந்தால், இப்பொழுது இவர்களோடு நானும் வயிறு நிறையத் தின்று இருக்கலாமே! நான் ஐயமிடாமையால் வந்த தீமை இது; இனி எதையும் தனியாக உண்ணேன்' என்று நினைத்துக்கொண்டான். பிள்ளைகளே! நீங்களும் இச்சிறுவனைப்போலச் செய்யாமல் சக்தியான வரையில் உங்களை அண்டினவர்க்கு ஈயக்கடவீர்.

8. 'ஙப்போல் வளை'

இரண்டு சகோதரர்கள் ஓர் அரசனிடத்தில் அடிமைப்பட்டிருந்தனர். அரசன் அவர்களை நோக்கி, 'நீங்கள் தலைக்கு ஓர் ஆயிர ரூபா வீதம் கொடுத்தால், உங்களை விடுவிப்பேன்' என்று சொல்லியிருந்தான். இவ்வடிமைகளில் மூத்தவன் பலமும் சுறுசுறுப்புமுடையவன். இவன் அரசன் இட்ட வேலையை மிகச் சீக்கிரத்தில் முடித்துவிட்டு, மற்றையோரிடத்திலும் கூலிக்கு வேலை செய்துவந்தான். அதனால் இவனுக்கு நிரம்பக் கூலி கிடைத்தது. இப்படியாக இரவு பகலாய் இவன் உழைத்துவர, சில வருஷங்களுக்குள் இவன் ஆயிர ரூபா சேர்த்துவிட்டான்.

இப் பணத்தை இவன் ஒரு நாள் அரசன் முன்னே வைத்து, 'பிரபோ! அடியேன் தம்பியை விடுவிக்க வேண்டும்' என்று வேண்டினான்.

அரசன் பணத்தைப் பார்த்தான். அவ்வளவு பெருந்தொகையைச் சேர்த்ததற்கு வெகு ஆச்சரியமுற்றான். அவன் அடிமையை நோக்கி, 'அடா! பைத்தியக்காரா! கஷ்டப்பட்டு இவ்வளவு சம்பாதித்து உன்னை விடுவித்துக் கொள்ளாமல் உன் தம்பியை விடுவிக்க முயன்றனையே!' என்றான். அடிமை, 'வேந்தே,

அடியேன் நன்ருய் வேலைசெய்வேன்; என் தம்பி சோம்பேறி; அவனை விட்டுவிட்டு நான் விடுவித்துக் கொண்டால், அவன் உழைத்து ஒருநாளும் பொருள் சேர்த்துத் தன்னை விடுவித்துக்கொள்ளப் போவதில்லை. என் தம்பி துன்பப்பட, நான்மட்டும் வாழ்வ தென்ருல் என் மனம் எப்படித் துணியும்?' என்ருன்.

கேட்ட மன்னவன் அடிமையின் உறவினரைக் காக்கும் குணத்தை மெச்சி, பணம் இல்லாமலே இருவரையும் விடுவித்தான். ஆயிரம் ரூபாயை வைத்துக்கொண்டு, இருவரும் நன்மை அடைந்தனர்.

9. 'சோம்பித் திரியேல்'

ஒரு சோப்பேறி ஒரு பெரியவரிடத்திற் போய் 'ஐயா! நான் செப்படி வித்தைக்காரன்; ஒரு மாங் கொட்டையை நட்டு மூன்றே முக்கால் நாழிகைக்குள் அதை மரமாக்கி, அதிலிருந்து நல்ல பழம் பறித்து, உங்களுக்குத் தருவேன். நீங்கள் என் திறமையைப் பார்த்துத் தக்கபடி பரிசு அளிக்க வேண்டும்" என்றனன்.

அவர், 'ஆ! அப்படியா?' என்றுசொல்லி. அவன் காட்டிய வித்தையைப் பார்த்தார். பார்த்த பிறகு அவனுக்கு வெகுமதியாக நூறு

மாங்கொட்டையை அளித்தார். அவன் பெரிய வெகுமதியை எதிர்பார்த்திருந்தான். அஃது இல்லாமற் போகவே, அவன் கண்டு திடுக்கிட்டுப் போனுன்.

பின்பு அவரை அவன், 'ஐயா! இது தாஞ வெகுமதி?' என்ருன். பெரியவர், 'ஏன்? உனக்குத்தான் மாங்கொட்டைகளை நட்டு மூன்றே முக்கால் நாழிகைக்குள் மரமாக்கி, அதினின்றும் பழம்பறித்துக்கொடுக்கத் தெரியுமே! 'இக் கொட்டைகளை அகன்று பரந்த நிலத்தில் நடு; ஒரு பெருந் தோப்பு உண்டாக்கு; அதில் பழுக்கும் பழங்களை வில்; நிறையப் பொருள் சேர்; பணக்காரன் ஆகு' என்ருர்.

அதைக் கேட்ட வித்தையாடிக்குப் பதில் கூற முடியவில்லை; அவன் அவமானமுற்று, 'நாம் சோம்பித் திரிந்ததன் பயன் இது, என்று வெறுங் கையோடு சென்ருன். பின்பு அவன் சுறுசுறுப்போடு வேலைசெய்து நிரப்பப் பொருள் சேர்த்துச் சுகித்திருந்தான்.

10. 'ஞயம்பட உரை'

ஒரு நாள் சோழ ராஜன் தன் பரிவாரத்தோடு காட்டிற்கு வேட்டையாடப் போனுன். அங்கு ஒரு மான் தென்பட்டது. அதைத் துரத்திக் கொண்டு போகையில், குப்பாத் தேவர்

என்ற ஒரு பெரிய ஜமீன்தாருடைய தோட்டத்து வழியே சென்றான்.

அயலான் ஒருவன் தம் தோட்டத்து வழியே உத்தரவின்றிச் சென்றதை அத்தேவர் பொறுக்கவில்லை. அவர் சோழன் எதிரே வந்தார்; 'நில்லுமையா! இதுதானா உமக்கு வழி?' என்று கோபித்துக் கேட்டார்.

அரசன் திடுக்கிட்டு, 'என்னை யாரென்று தெரியுமா உமக்கு?' என்றான். அதற்கு அவர், 'ஏன்? நன்றாய்த் தெரியும். நீர் சோழமண்டல அரசர். யானோ, என் பூமிக்கு அரசன் என்றார்.

உடனே வேந்தன், 'ஆ! ஆ! அப்படியா? நான் இப்போது சக்கரவர்த்தி ஆயினேன்! அரசனல்லேன்; ஏனெனில் அரசர்களெல்லாம் குடிமக்களை ஆள்கின்றனர். யானோ உம்மை ஒத்த தீர அரசர்களை ஆளுகின்றேன்!' என்றான்.

குப்பாத் தேவர் அரசனுடைய சமத்காரத்தையும், நய மொழியையும் பெரிதும் மெச்சினார். 'இவ்வளவு நல்ல அரசனை வெட்டெனப் பேசினோமே!' என்று மனம் வருந்தினார். பிறகு தம்மை மன்னிக்கும்படி வேந்தனை வேண்டினார்.

மன்னவன் அவ்வாறே மன்னித்தான். அன்றிரவு அத்தேவர் அவனுக்கு விருந்திட்டு மரியாதை செய்தார். நயமான வார்த்தை பேசிய அரசனுக்கு வந்த சிறப்பைப் பாருங்கள்!

11. 'தூக்கி வினைசெய்'

ஒரு தேயத்தில் இரண்டு சிநேகிதர்கள் இருந்தார்கள். அங்கே ஒரு கொடிய பஞ்சம் வந்தது. ஆகாரம் கிடையாமற் போயிற்று. போகவே, அவ் விருவரும் பிழைக்கும் வழியை நாடித் தேசாந்தரம் புறப்பட்டனர்.

போகும் வழியிலே ஒரு பெருங் கள்ளர் கூட்டத்தைக் கண்டனர். அக் கள்வர்களிடம் ஏராளமான பணமும், நகைகளும் இருந்தன. அவற்றைக் கண்ட அவ் விருவரில் ஒருவன், 'நண்பா! இவர்களிடத்தில் வேண்டிய எல்லாம் இருக்கின்றனவே! நாம் ஏன் தூர தேசம் செல்லவேண்டும்? இவர்களோடு கூடிக்கொள் வோமே' என்றனன்.

அதற்கு மற்றவன், 'நீ சொல்வது உண் மைதான். ஆனால், இவர்கள் ஊர்க் காவலர் கையில் அகப்பட்டுக்கொண்டால், நமது கதி என்ன ஆகும்? சிறைச்சாலைக்கன்றோ போக வேண்டும், நான் வரமாட்டேன்' என்றான்.

முதலாமவன், 'இவர்கள் இதுவரையில் அவ்வாறு அகப்பட்டுக்கொள்ள வில்லையே; இனி ஒரு நாளும் அகப்பட்டுக்கொள்ளமாட் டார்கள்; நீ வராவிட்டால் போ. நான் இவர்க ளோடு கூடிக்கொள்ளுகிறேன்' என்றான். மற்ற

வன், 'சரி, நீ போ; நான் வரவில்லை' என்று போய்விட்டான்.

முதலாமவன் கள்வர்களோடு கூடிக்கொண்டான். அப்படிச் செய்து ஒரு நாள்கூட முழுவதும் ஆகவில்லை. அதன் முன்னேயே அக் கள்ளர் கூட்டம் ஊர்க் காவலர் கையில் சிக்கிக் கொண்டது. உடனே அக் கள்ளர்களோடு திருடாத அம் முதலாமவனும் சிறையில் அடைக்கப்பட்டான்.

முன்னாலோசனை இல்லாத அவன் துன்பமுறுவதை மற்றவன் கண்டான். அரசனிடம் போய்த் தன் கூட்டாளி கள்வரில் ஒருவனல்லன் என்றான். நடந்ததைச் சொல்லி ருஜுப்படுத்தி அவனை விடுவித்துக்கொண்டு ஊர் போய்ச் சேர்ந்தான்.

12. 'தெய்வ மிகமேல்'

ஒரு கோமுட்டி ஒரு பெரும் பணத் தொகையுடன் குதிரைமேல் ஏறிக்கொண்டு அயலூருக்குப் புறப்பட்டான். ஜனசஞ்சாரமில்லாத ஒரு வெளியிற் போகும்போது, பெரு மழை பிடித்துக்கொண்டது. அவன் முழுமையும் நனைந்து போனான். அதனால் அவன், 'ஐயோ தெய்வமே! என் பிரயாணம் பொல்லாங்கு இல்லாமல் முடிய வேண்டுமென்று உன்னைப்

பல தரம் பிரார்த்தித்தேனே! நீ இவ்வாறு மழையையுங் குளிரையுங் கொண்டு வந்து விட்டாயே! நான் கஷ்டப்படுகிறேனே! உனக்குத் தயை இல்லையா? உன்னைக் கருணாநிதி என்கின்றார்களே. அது பொய்தானே!' என்று அவர்மேற் குறைகூறி இகழ்ந்தான்.

அப்படி இகழ்ந்துகொண்டே செல்லுகையில், திடீரென்று ஒரு திருடன் கிளம்பி வந்து, அவனைத் தனது துப்பாக்கியால் சுட்டான். கோமுட்டி நடுநடுங்கி, மெய் பதறிச் சோர்ந்து போனான். ஆனால், கள்வனது துப்பாக்கி முன் பெய்த மழையினால் நனைந்து போயிருந்தது. அதனால் மருந்து பற்றிக்கொள்ளவில்லை. குண்டும் கோமுட்டிமேல் பாயவில்லை. இதைக் கண்ட கோமுட்டி குதிரையை அதிக வேகமாகச் செலுத்தித் திருடனுக்கு அகப்படாமல் தப்பிப் போய்ச் சேர்ந்தான்.

சேர்ந்ததும், 'ஆ! ஆ! நான் கடவுளை இகழ்ந்தேனே! மழை பெய்யாமற் போயிருந்தால், என் கதி என்ன ஆயிருக்கும்! துப்பாக்கி தீப்பற்றிக் குண்டு பாய்ந்திருக்குமே! மழை பெய்ததனால்தானே குண்டு பாயவில்லை; என் உயிரும் பொருளும் தப்பின! அற்ப அறிவுடைய நான் முற்றும் உணர்ந்த கடவுளை இகழ்ந்தேனே! கடவுளே! என்னை மன்னிக்க

வேண்டும்; என்று பிரார்த்தித்தான். அன்று முதல் அவன் தெய்வத்தைப் பழிப்பதைவிட்டு விட்டு, சுகம் அடைந்தன்.

13. 'நன்றி மறவேல்'

ஓர் ஊரில் ஒரு கனவான் இருந்தார். அவர் ஒரு நாள் காட்டில் வேட்டையாடிக் கொண்டிருந்தார். அங்கே வழி தெரியாமல் மயங்கித் தவிக்கும் ஒரு வாலிபனைக் கண்டார். அவனிடத்தில் அவர் இரக்கமுற்று, அவனைத் தம் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்; அன்ன வஸ்திரங்களும் கொடுத்து ஆதரித்தார்.

அவன் அன்றுமுதல் அவர் வீட்டிலே ஒரு வாரம் வரையில் இருந்தான். கடைசி நாள் அவர் அவனைத் தமது பொக்கிஷ அறைக் குள்ளே அழைத்துச் சென்று, பணப் பெட்டி யைத் திறந்து, பத்துப் பவுன் எடுத்து, அவன் கையில் கொடுத்து, 'ஊர் போய் வா' என்று சொல்லி அனுப்பினர். சிறுவன் பணத்தை வாங்கிக்கொண்டு வெளியே வந்தான்; வருகை யிலேயே, அவர் பெட்டியைத் தூக்கிப் போய் விட வேண்டு மென்று கெட்ட எண்ணம் எண்ணிக்கொண்டான்.

அன்று இரவு பதினைந்து நாழிகைக்கு அவ் விளைஞன் தனவான் வீட்டில் சுவ ரேறிக் குதித்து உட்சென்முன்; திரவிய சாலைக்குள்

நுழைந்தான். பெட்டியை எடுத்துக்கொண்டு, கொல்லைப் புறத்துக்கு வந்தான். அப் பெட்டியைத் திருடிப் போவதற்காக ஏற்கெனவே ஒரு திருடன் அங்கு வந்து சமயம் பார்த்திருந்தான்; இவன் வருவதை அவன் கண்டு, இவன் மேல் விழுந்து பெட்டியைப் பிடுங்கினான்.



சிறுவனும் துணிவுடன் நின்று அவனை அடித்தான். இப்படி இருவருக்கும் கொடிய போர் விளைந்தது. முடிவில் ஒருவர் கையால் ஒருவர் அடியுண்டு வீழ்ந்தனர். இச்சண்டையின் ஆரவாரத்தால் கனவான் விழித்துக்கொண்டார்; கொல்லைப்புறம் வந்தார்: விழுந்துகிடக்கும் இருவரையுங் கண்டார்; திடுக்கிட்டுப் போனார்.

அப்போது இளைஞன் அவர் காலில் விழுந்து, 'உமக்குத் துரோகஞ் செய்ததன் பயன் இது' என்றான். கனவான் அவனை மன்னித்ததுமன்றி வந்த திருடனையும் மன்னித்தார். பின்பு இருவரும் அக் கனவானுக்கு உண்மையான சேவர்கள் ஆனார்கள். ஆயுளுள்ள வரையில் அவருக்கு வேலை செய்து நல்ல பேர் வாங்கினார்கள்.

14. 'புகழ்பட வாழ்'

ஒரு வித்வான் சோழ மகாராசாவினிடம் போய்த் தன் மகளின் கலியாணத்திற்காகப் பணம் வேண்டுமென்றான். சோழன் அவனைத் தன் பொக்கிஷக்காரனிடத்தில் வேண்டிய தொகையைப் பெற்றுப் போகும்படி அனுப்பினான். வித்வான் அவ்வாறே போய், பொக்கிஷக்காரனைப் பணம் கேட்டான். பொக்கிஷக்காரன், 'உமக்கு எவ்வளவு வேண்டும்?' என்றான். அதற்குப் புலவன், 'ஒரு கோடி ரூபா வேண்டும்' என்றான்.

பொக்கிஷ உத்தியோகஸ்தன் பிரமித்துப் போனான். 'இவ்வளவு பெருந்தொகையை அரசன் நேர் உத்திரவில்லாமல் கொடேன்' என்று, புலவனோடு அரசன் முன் வந்தான். வந்து, இவர் ஒருகோடி ரூபா கேட்கிறாரே!' என்றான்.

சோழன், 'இவர் கேட்ட தொகையைக் கொடுத்துவிடு. இவரைப்போல என்னை யார் கௌரவிப்பார்? என்னை ஒருகோடி ரூபா கேட்டதனால், நான் செல்வத்தால் குபேரனென்றும், கொடையால் * 'பாரி' என்றும் இவர் கருதினாரல்லரோ!' என்றான்.

பொக்கிஷக்காரன் பணத்தைக் கொடுத்துவிட்டான். சோழனும் பெரும்புகழ் பெற்றான்.

15. 'பெரியாரைத் துணைக்கோள்'

ஒரு குடியானவன் சோற்றுக்கு இல்லாமல் மிகவும் வருந்தினான். அவனுடைய மனைவி, 'கணவரே! நமது அரசனிடத்தில் எல்லாரும் போய்த் திரவியம் பெற்று வருகிறார்களே; நீரும் போய் வாங்கிவரக் கூடாதா?' என்றாள்.

கேட்ட அவன் தன் மூடத்தனத்தை நினைத்து இரங்கி, சற்றுத் தேறி, 'நல்லது' என்று, வீட்டை விட்டுப் புறப்பட்டான்; காட்டுக்குச் சென்று, கனத்த சுமையாக ஒரு கட்டு விறகு வெட்டிக்கொண்டு வந்து, கம்பருடைய வீட்டில் போட்டான். கம்பர், 'உன் விறகுக்கு என்ன கொடுக்கவேண்டும்?' என்றார். அவன், 'புலவரே! அடியேனுக்கு அரசனிடத்தில் சம்மானம் வாங்கித் தரவேண்டும்' என்றான்.

---

* இப் பாரி கதையைச் சங்கசிந்தாமணியில் படிப்பீர். இச் சோழன் பெருந்திருமாவளவன் என்பான்.

கம்பர், 'உனக்கு என்ன தெரியும்?' என்ருர். அவன், 'எனக்கு விறகு வெட்டத் தெரியும்' என்ருன். புலவர், 'நீ கல்வி அறிவில்லாத மூடனுயினையே, உனக்கு அரசன் எப்படிப் பரிசு அளிப்பான்?' என்ருர்.

அவன், அவர் காலில் விழுந்து, 'கவிச் சக்கரவர்த்தியே! எப்படியாவது எனக்குப் பரிசு வாங்கித் தரவேண்டும்; இல்லையென்ருல், உமது வீட்டு வாசலிலேயே பட்டினிகிடந்து உயிர்விடுவேன்' என்ருன்.

கம்பர் அவன் மனத்தின் உறுதியைப் பார்த்தார்; இவனுக்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்று நினைத்தார்: அவனை நோக்கி, 'நீ நாளையதினம் ராஜ சபைக்கு வா. நானும் மற்றப் புலவரும் இருக்கையில், உனக்குத் தெரிந்ததைச் சொல்' என்ருர். அவன் மறு நாள் அவ்வாறே போய், * 'கன்னு, பின்னு, மன்னு, தென்னு, சோழனே!' என்ருன். சபையில் உள்ள புலவர் அனைவரும், 'இஃதென்ன புதுமை!' என்று நகைத்தனர்.

கம்பர் எழுந்து, 'புலவீர்காள்! இப்பாவலன் சொன்னதில் ஒரு தோஷத்தையும் காணேமே. அவன் கூறியதற்குப் பொருள்

---

* கன்னு—கர்ணனே! பின்னு மன்னு—சண்டையில் பின் அடையாத ராஜனே! தென்னு—பாண்டியனே! தென்னுட்டினைச் சோழன் வென்ருன் ஆதலால், தென்னனுன்.

சொல்லுகிறேன் கேளுங்கள் : அது — 'கர்ணன்போல யாசகர்க்கு வேண்டியதைக் கொடுப்பவனும், போரில் தோற்றுப் பின் வாங்காத மன்னனும், பாண்டி நாட்டிற்கு அதிபனுமான சோழனே! — என்பது' என்றார். இதைக் கேட்ட மற்றப் புலவர்கள் வெட்கிப் போயினர்.

அரசன் மகிழ்ந்து, விறகுதலையனுக்குப் பரிசு அளித்தான். அப் பொருளை அவன் தன் மனைவியிடம் கொடுத்துவிட்டு, கம்பரை அடுத்து, அவரிடத்திற் கல்வி பயின்று, உண்மையிலேயே வித்வான் ஆனான். பெரியாரது சேர்க்கையின் பயனைப் பாருங்கள்!

16. 'மனந் தடுமாறேல்'

ஓரூரில் ஒரு கனவான் இருந்தார். அவர் தாம் எப்பொழுதும் ஒற்றைத்திருடனுக்கு அஞ்சுவது இல்லை என்று அடிக்கடி சொல்லுவது வழக்கம். ஒருகால் அவர் ஒரு பெரும் பணத் தொகையுடன் காட்டின் வழியே தனியாகப் போய்க்கொண்டிருந்தார். அப்பொழுது திடீரென்று ஒரு திருடன் புதரினின்றும் கிளம்பி வந்தான்; 'பிரபுவே! நீர் ஒற்றைத் திருடனுக்கு அஞ்சுவதில்லையே! இப்பொழுது யாது செய்வீர்?' என்று துப்பாக்கியை அவர் முகத்துக்கு நேரே பிடித்தான்; 'சுட்டுவிடட்டுமா; பணப் பையைக் கீழேவைக்கிறீரா?' என்றான்.

கனவான் சிறிதும் பதருமல், 'நான் ஒற்றைத் திருடனுக்கு அஞ்சுவதில்லை என்று கூறுவது உண்மைதான். நீ இப்பொழுது ஒருவனுய் வரவில்லையே; அதோ உன் பின்னுல் உன் கூட்டாளி நிற்கிருனே!' என்ருர். திருடன் திடுக்கிட்டு, 'இஃது ஏதடா; நமக்குப் பங்காளி ஒருவன் வந்துவிட்டானு என்ன?' என்று திருப்பிப் பார்த்தான்.

அத்தருணம் நோக்கிய கனவான் கண் மூடித் திறக்குமுன் தன் கைத்துப்பாக்கியை எடுத்து, அத் திருடனைச் சுட்டுத் தள்ளிவிட்டுத் தப்பித்துக்கொண்டு, ஓடிவிட்டார். ஆபத்துக் காலத்தில் மனங் கலங்காமல், யுக்தியாய்க் காரியஞ் செய்தமையால், அவர் தம் பொருளையும் உயிரையும் காத்துக்கொண்டார்.

17. 'மாற்ருனுக்கு இடங்கொடேல்'

ஒரு காட்டில் வீரகேசரி என்று ஒரு சிங்கம் இருந்தது. அது ஒருநாள் தனக்கு உடம்பு அசௌக்கியம் என்று தன் குகையிலே படுத்து இருந்தது. இதைக் கேள்விப்பட்டு, மற்ற மிருகங்கள் எல்லாம் அதைக் காணப்போயின. நரி மாத்திரம் போகவில்லை.

அப்பொழுது அங்கு இருந்த ஒரு கழுதைப்புலி சிங்கத்துக்கு நரியின் இடத்தில்

கெட்ட அபிப்பிராயம் உண்டுபண்ண வேண்டும் என்று, 'வேந்தே! இந்த விஷம நரி பல இடங்களிலும் போய், மகாராஜாவின் தேக அசௌக்கியத்தைக் குறித்துக் கண்டபடியெல்லாம் புரளி பண்ணிக்கொண்டு திரிகின்றது. அதன் வார்த்தையைக் கேட்க மனம் பிடிக்கவில்லை' என்றது.

இதை நரி எப்படியோ கேள்விப்பட்டது. 'நல்லது இருக்கட்டும்' என்று அது சிங்கத்தின் சபைக்கு வந்தது. சிங்கம் நரியை உருத்துப் பார்த்து, 'நரியே! இதுவரையில் நீ என்ன செய்தாய்?' என்றது. நரி, மகாராஜாவே! 'எல்லாரையும் போல அடியேனும் வெறும்

பேச்சுப் பேசுவதில் பயன் இல்லையென்று பல இடங்களிலும் அலைந்து, மகாராஜா நோய்க்கு நல்ல மருந்து விசாரித்துக் கொண்டிருந்தேன்!' என்றது.

சிங்கம், 'நல்லது; ஏதாவது அகப்பட்டதா?' என்றது. உடனே நரி, 'அடியேன் சும்மாத் திரும்புவேனா? கழுதைப்புலியின் இரத்தத்தைச் சுடச் சுடக் குடித்தால், மறுநாளே மகாராஜாவுக்குச் சௌக்கியமாகும்' என்றது. சிங்கம், 'அப்படியா!' என்று, கழுதைப் புலி மேற் பாய்ந்து, அதன் மாமிசத்தைக் கிழித்து, இரத்தத்தைக் குடித்தது.

புத்தி மிக்க நரி சத்துருவுக்கு இடங் கொடாமல், அதை நாசஞ்செய்து, இன்புற்றது.

18. 'மிகைபடச் சொல்லேல்

முன்னொரு காலத்திலே தென்னாட்டிலே ராயர் என்று ஓர் அரசர் இருந்தார். அவரிடத்தில் தென்னாலி ராமன் என்று ஒரு விகடன் இருந்தான். அவ் விகடன் சிறந்த புலவன்; பேசுவதில் மிகவும் சதுரன். தனக்காயினும் தன் நண்பருக்காயினும் என்ன ராஜ தண்டனை விதிக்கப்பட்ட போதிலும், அதை ஒரு நொடியில் தந்திரமாக விலக்கிவிடுவான்.

ஒருநாள் அவ் விகடனது மைத்துனன் ஒருவன் இராயர் கோபிக்கும்படியான ஏதோ ஒன்றைச் செய்து விட்டான். அதுபற்றி இராயர் அவனுக்குமரண தண்டனை விதித்தார். இதைத் தென்னலி ராமகவி கேள்வி யுற்றான்; உடனே இராயர் சபைக்கு வந்தான். இராயர் அவனைத் தூரத்தில் வரும்பொழுதே கண்டு, 'ஓ ராமா! நீவரவேண்டாம்! வரவேண்டாம்! நீ வருவதில் பயன் இல்லை. நீ கேட்கப் போவது எனக்குத் தெரியும். இந்தச் சமயம் நீ சொல்வதைக் கேட்கவே மாட்டேன். அதற்கு விரோதத்தையே செய்வேன். இஃது உண்மை, உண்மை' என்று சொன்னார்.

இதுதான் தருணமென்று கண்டுகொண்டான் ராமகவி. 'ஐயா! மகாராஜாவே! ஒரு விண்ணப்பம்: அடியேனுடைய மைத்துனன் மிகவும் பொல்லாதவன்; அவனை இப்பொழுதே தூக்கிற்போட வேண்டும். தாமதிக்கக் கூடாது. மகாப் பிரபோ! தாங்கள் சொல் தவறாதவர்கள் ஆனீர்களே' என்றான்.

இதைக் கேட்டதும், ராயர் திடுக்கிட்டுப் போய்விட்டார். 'ராமா! ஏய்த்தாயே! நான் அதிக பேச்சு பேசிவிட்டேனே! உன் மைத்துனனைக் கொல்லச் சரிப்பட இல்லையே!' என்று பச்சாத்தாபமுற்றார். விகடன் மைத்துனனை விடுவிக்கும்படி உத்தரவும் அளித்தார்.

19. 'வஞ்சகம் பேசேல்'

ஒரு நாள் ஒரு நரி இரைக்காக அலைந்து கொண்டிருந்தது. அப்போது, ஒரு குடியானவன் வீட்டுக் கூரைமீது இருந்த ஒரு சேவலைக் கண்டது. அச்சேவல் நரிக்கு எட்டாத உயரத்தில் இருந்தமையால், அதைக் கீழே வருவிக்க அஃது ஓர் உபாயம் பண்ணிற்று. அது சேவலை நோக்கி, 'ஓ! நண்பா! உனக்கு நான் ஒரு நல்ல சமாசாரம் கொண்டுவந் திருக்கிறேன். பிராணிகள் எல்லாம் சேர்த்து நேற்று ஒரு சபை கூடின. அச் சபையில், 'இனி ஒருவரோடு ஒருவர் பகைமை பாராட்டப்பட்டது' என்று தீர்மானஞ் செய்தன. ஆதலால், நண்பா! நீயும் நானும் அன்பான தோழர்கள் ஆயினோம்; இருவரும் களித்து சந்தோஷமாகக் கூத்து ஆடுவோம்; இறங்கிவா' என்றது.

சேவல் நரியின் வஞ்சகத்தை அறிந்து கொண்டது. ஒரு பக்கம் தலை நிமிர்ந்து பார்த்தது. நரி, 'நேசா! என்ன பார்க்கிறாய்?' என்றது. சேவல், 'இந்தச் சந்தோஷத்தைக் கொண்டாட இரண்டு நாய்களும் நம்மை நோக்கி வருகின்றன; அவைகளைச் சீக்கிரம் வரும்படிச் சாடை காட்டினேன்' என்றது. இதைக் கேட்டதும், நரி ஓட்டம் பிடித்தது.

கோழி 'நண்பா! நண்பா! ஏன் ஓடுகிருய்? சற்றுநேரத்திற்கு முன்னே 'எல்லாப் பிராணிகளுக்கும் நேசம் உண்டாகி விட்டது' என்றனையே!' என்றது. நரி ஓடிக்கொண்டே, 'இந்த நாய்களுக்கு அச் சபையின் தீர்மானம் தெரியாது' என்று உளறிக்கொண்டு பறந்தது. இச்செய்தி கேட்ட மற்ற நரிகள் அந் நரியைக் கேலிசெய்து, கடித்துத் துரத்தின.

20. 'வல்லமை பேசேல்'

ஒரு காட்டில் ஒரு நரியும் பூனையும் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. ஒரு நாள் அவ்விரண்டும் பேசிக்கொண் டிருக்கையில், நரி பூனையை நோக்கி, 'தம்பி! இப்பொழுது வேட்டைநாய்கள் வந்து, நம்மை வளைத்துக்கொண்டால், நீ என்ன செய்வாய்?' என்றது. பூனை, 'நான் என்ன செய்வேன்? எனக்கு ஒன்றும் அதிகந் தெரியாது. மரத்தில் ஏறி ஒளிந்துகொள்வேன். அதுதான் எனக்குத் தெரிந்தது' என்றது.

நரி, 'சீ! பேதாய்! இதுதான உனக்குத் தெரிந்தது! மரம் அருகில் இல்லாவிட்டால், யாது செய்வாய்? நாயினிடத்தில் அகப்பட்டுக்கொண்டு, இறக்க வேண்டியதுதானே! எனக்கோ ஆயிரம் தந்திரங்கள் தெரியும்.

ஒன்று கூடாவிடில் ஒன்றுசெய்து, தப்பித்துக் கொள்வேன்' என்றது.

இப்படி அது தன் வல்லமையைப் பேசிக் கொண்டிருக்கையில், 'ஹா ! ஹூ !' என்ற வேட்டைக்காரர் கூச்சலும், நாய்களின் குரைப்பும் கேட்டன. ஒரு நொடியுள் பூனை மரத்தில் ஏறிக்கொண்டது. நரியோ விலவிலத்துப்

போய், ஒன்றுந் தோன்றுமல் திகைத்தது. அதன் யுக்திக ளெல்லாம் எங்கேயோ போய் ஒளித்துக் கொண்டன. சமயத்துக்கு அவை ஒன்றும் வந்து உதவ வில்லை. நாய்களோ அருகில் நெருங்கிவிட்டன. நரி மனந்தடுமாறிக்

கண்மூடித்தனமாக ஒரு பக்கம் விரைந்து ஓடிற்று. அப்பக்கத்தில் அதை ஒரு நாய் வந்து கௌவிக் கொண்டது. அடங்கிப் பேசிய பூனை தப்பித்துக் கொண்டது.

21. 'வித்தை விரும்பு'

ஓரூரில் ஓர் ஏழைப் பையன் இருந்தான். அவனுக்குத் தாய் தகப்பன்மார் எவரும் இல்லை. அவன் தன் வயதுப் பிள்ளைகள் பலர் படிப்பதைக் கண்டான். தானும் படிக்க ஆசை கொண்டான். ஆனால், அவனுக்குப் பள்ளிக்கூடச் சம்பளம் கொடுக்கவாவது புத்தகம் வாங்கித் தரவாவது யாருமில்லை.



இப்படி இருக்க, ஒரு நாள் அவன் தன்னோடு 'கோலி' யாடும் ஒரு வாலிபனைக்

கண்டான். 'அடே, எனக்கு நீ தினம் தினம் பத்துப்பத்து அக்ஷரம் சொல்லிக் கொடுத்தால், உனக்கு நான் ஒவ்வொரு கோலி கொடுத்து வருவேன்' என்றான். அப் பையன், 'நான் சொல்லிக் கொடுக்கிறேன்' ஆனால், உனக்குப் புத்தகம் இல்லையே; நீ எப்படிப் படிப்பாய்?' என்றான்.

அதற்கு ஏழைப் பையன், 'புத்தகம் வேண்டுவதில்லை. நான் கோயிலுக்கு வருகிறேன்; அங்கே சித்திரங்களின் கீழே எழுத்து எழுதி யிருக்கின்றனவே; அவற்றைக் காட்டி எனக்கு எழுத்துச் சொல்லிக்கொடு' என்றான். அப் பையன் சரி என்று ஒப்புக்கொண்டான்.

படிப்பில் ஆவல்கொண்ட பையன் ஒவ்வொரு நாளும் கோலி ஆடுகையில் அதிக கவனத்துடன் ஆடினான். நாளுக்கு நாள் அதிகம் அதிகமாகக் கோலி கெலித்தான்; தனக்கு எழுத்துச் சொல்லித்தரும் குருவான பையனுக்கு அவற்றை யெல்லாம் தக்ஷிணையாகக் கொடுத்தான். அவன் இட்ட வேலையையும் செய்தான். அவன் இடத்தில் அக்ஷரம் அனைத்தையும் கற்றுக்கொண்டான்.

அவை தெரிந்த பிறகு, தெருக்களில் ஒட்டப் பெற்றிருக்கும் பிரசுரங்களை யெல்லாம் படிக்கத் தலைப்பட்டான். இவ்வாறு, கண்ட

வற்றை எல்லாம் அவன் படித்து வரவே, எந்தப் புத்தகத்தையும் படிக்க அவனுக்குத் திறமை உண்டாகிவிட்டது.

அவன் படிக்கக் கற்றுக்கொண்ட கதை ஊர் முழுமையும் பரவிற்று. கடைசியில் அவ்வூர் அரசன் காதிற்கும் எட்டிற்று. மன்னவன் உடனே அச் சிறுவனை வருவித்தான். சில கேள்விகள் கேட்டான். அவன் தக்க விடை கொடுத்தான். அதன்மேல், அவனைத் தன் பாடசாலையிற் படிப்பித்தான்.

இளைஞன் மிகுந்த ஊக்கத்துடன் பாடங்களைக் கற்று, அதி சீக்கிரத்தில் வித்துவானுனன். அவனது கல்வித் திறமையை வியந்து, அரசன் அவனைத் தனது ஆஸ்தான வித்துவான் ஆக்கினுன். கல்வி கற்கவிரும்பிய சிறுவன் பிற்பாடு பெருஞ் சிறப்புற்றான்.

22. 'உத்தமனு யிரு'

தஞ்சாவூர் ஜில்லாவில் அணக்குடி என்று ஓர் ஊருண்டு. அவ் வூரிலே சில வருஷங்களுக்கு முன் சாமிநாதப பிள்ளை என்று ஒரு சீமான் இருந்தார். அவருடைய பெருந்தன்மையும் நலல குணமும் உலகப் பிரசித்தமாக இருந்தன. அவர் ஒருகால் தம் பந்துக்கள் எல்லாரோடும் இராமேச்சுவர யாத்திரைக்குப் புறப்பட்டார்.

சமுத்திர ஸ்நானஞ் செய்தபிறகு, இராமநாதபுரம் வழியாக அவர் ஊருக்குத் திரும்பினார். அப்போது, அவரது கீர்த்தியை அவ்வூர் ஜமீன்தார் முன்னமே கேள்வியுற்றிருந்தார். அதனால் அவர் அவரை எதிர்கொண்டு உபசரித்தார். தம் மாளிகையில் விருந்து உண்டு போகவேண்டும் என்றும் வேண்டினார்.

அணக்குடிப் பிள்ளை அதற்கு உடன்பட்டார். தம் பந்துக்கள் சூழ, ஜமீன்தார் அரண்மனைக்குச் சென்றார். ஜமீன்தாரோ அவரது பெருங் குணத்தைச் சோதித்து அறிய எண்ணங்கொண்டார். அவர் அதற்காக அணக்குடிப் பிள்ளை உள்ளே நுழைந்ததும், அவருக்கு ஒரு மரியாதையும் செய்யாமல் சும்மா இருந்து விட்டார்.

பிள்ளையோ அதைப் பொருட்டாக எண்ணவில்லை. போஜன சாலையுள் நுழைந்தார். அங்கே ஒருவருக்குக்கூட இடம் இல்லாமல் ஜமீன்தார் வீட்டு ஜனங்களே உட்கார்ந்து இருந்தனர். அவர்கள் பிள்ளையவர்களைக் கண்டும்கூட உட்கார இடம் தர இல்லை.

அதையும் அவர் பொருள்செய்யாது, பாழ் அடைந்த ஒரு மூலைக்குச் சென்றார். அங்கே தாம் மேலே போர்த்திருந்த மிக்க

விலைபெற்ற காசிப் பீதாம்பரத்தை மடித்து, ஆசனமாகப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தார். அவர்செய்ததைப் பார்த்து, அவர் பந்துக்களும் தம் தம் விலை உயர்ந்த உத்தரீயத்தை அவ்வாறு போட்டுக்கொண்டு உட்கார்ந்தனர்.

சாப்பாடு முடிந்த பிறகு, அணைக்குடிப் பிள்ளையும் அவர் பந்துக்களும் தாம்பூலம் பெற்றுக்கொண்டு, ஊருக்குப் புறப்பட்டனர். தாம் கீழே ஆசனமாக உபயோகப்படுத்தின பீதாம்பரம் முதலியவற்றை ஒருவராவது எடுத்துக் கொள்ளவில்லை. இவை யாவற்றையும் பார்த்திருந்த ஜமீன்தார் ஆச்சரியப்பட்டு, ஒரு தூதனை அவர் பின்னே அனுப்பி, அவர்கள் வைத்துவிட்டுப் போன பீதாம்பரம் முதலியவற்றை எடுத்துப்போகும்படி தெரிவித்தார்.

அதற்குச் சாமிநாதப் பிள்ளை அத் தூதனை நோக்கி, 'ஓ! தூதா! "அணைக்குடியார் தாம் உட்கார்ந்த ஆசனத்தைத் தாமே எடுப்பதில்லை" என்று உன் யஜமானனிடத்தில் சொல்லிவிடு' என்றுகூறிச் சென்றுவிட்டார்.

இதைக்கேட்ட ஜமீன்தார் வெட்கிப்போயினார். சாமிநாதப் பிள்ளையின் உத்தம குணத்தைக் கொண்டாடி, தம்முடைய புத்தி ஈனத்தை நினைத்துத் த ப்மையே நொந்துகொண்டார்.

23. 'ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்'

முன்னொரு காலத்தில் பகன் என்று ஒரு கொடியவன் இருந்தான். அவன் மிகவும் பலிஷ்டன். அவனுக்கு உணவு மிகுதியும் வேண்டும். ஒரு வண்டி நிறையச் சோறும், அவ்வண்டியை இழுக்கும் எருதுகளும், அவ் வெருதுகளை ஓட்டிவரும் ஆளும் அவன் பசிக்குச் சரியாக இருக்கும்.

அவன் ஏகசக்ர நகரம் என்ற ஒரு பட்டணத்தில் வசித்தான். அருகிலுள்ள ஒரு காட்டில் அவன் பசி எடுத்தபோது அந்நகரத்தில் உள்ள பல மனிதர்களையும், ஆடு மாடுகளையுங் கொன்று தின்று வந்தான்.

அவ்வூரார் அவனுக்கு அஞ்சி அவன் கேட்டவற்றை யெல்லாம் கொடுத்துவந்தனர். ஆனால். அவர்கள் தம் மனத்தில், 'இவன் சாகானா?' என்று நினைத்திருந்தனர். அக் கொடியோன் கொழுப்பு எடுத்து, செய்யாத அக்கிரமங்களை யெல்லாம் செய்துவந்தான். ஊரார் யாவரும் அவனுக்குப் பகைவர் ஆனார்கள்.

இப்படி இருக்க, அவ் ஏகசக்ர நகரத்திற்கு வீமன் என்றொரு வீரன் வந்தான். அவன்

அப் பகனுடைய கொடுமையையும், பலத்தை யும் கேட்டான்; அவனைக் கொன்றுவிடுவ தென்று தீர்மானித்தான். அதற்காக அவன் ஒரு வண்டி நிறைய உணவை நிரப்பினான். இரண்டு எருதுகளைப் பூட்டி ஓட்டிக்கொண்டு, அவனிருந்த காட்டிற்குச் சென்றான்.

அவ் வசுரனைத் தூரத்தே கண்டதும், அவன் வண்டியை நிறுத்தினான். அதிலுள்ள உணவைத் தின்ன ஆரம்பித்தான். பசித்த பகன் தன் முன்னே ஒருவன் சோறுண்ணக் கண்டால் எப்படிப் பொறுப்பான்! அவன் வீமனுடன் சண்டைக்கு வந்தான். வீமன் இதுதான் தருணம் என்று, அவனைப் பிடித்து நன்றாக அடித்தான்.

பகன் துன்பம் பொறுக்காது, ஏகசக்ர நக ரத்துள் ஓடினான். ஜனங்களெல்லோரையும் தனக்கு உதவி செய்யும்படி வேண்டினான். அவர்கள் இவன் செய்த கொடுமைகளை நினைத்து, 'உனக்கு நன்றாக வேண்டும்' என் றார்கள்; உதவிக்கு ஒருவரும் வரவில்லை. வந் திருந்தால் ஒருவேளை வீமன் அவனை ஜயித் திருக்க மாட்டான். துணைக்கு யாருமில்லாமல், அப் பாதகன் விழித்தான்; வீமன் அவனை விடாது தொடர்ந்து பிடித்துக் கொன்று போட்டான்.

அச் செய்தியை அறிந்த அவன் மனைவி மக்கள் எல்லாரும் கோபித்தார்கள். வீமனை எதிர்த்தார்கள். அவ் வீமன் அவர்களையும் அழித்து, பகாசுரன் சந்ததியை வேருடன் நாசமாக்கிவிட்டான்.

24. 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'

ஒரு கிராமத்தில் படிக்கத் தெரியாத ஒரு குடியானவன் இருந்தான். அவன் தன் எஜமானன் கண்ணாடி போட்டுக்கொண்டு இராமாயணம் படிப்பதைக் கண்டான்; அதன்மேல் தானும் கண்ணாடி போட்டுக் கொண்டால், படிக்கலாம் என்று எண்ணினன்.

அன்றைக்கே அவன் ஒரு பட்டணத்திற்குச் சென்றான். ஒரு கண்ணாடிக் கடையில் நுழைந்து, மூக்குக் கண்ணாடி கேட்டான். கடைக்காரன் ஒன்று எடுத்துக் கொடுத்தான். அதை அவன் மாட்டிக்கொண்டு, அருகில் இருந்த ஒரு பத்திரிகையை எடுத்துப் பரபரப்பாகப். படிக்கத் தொடங்கினன்.

எழுத்து வாசனை அற்ற அவனுக்கு அதில் என்ன விளங்கும்? ஒன்றும் விளங்காமையால் வேறொன்று போட்டுப் பார்த்தான். அப்பொழுதும் முன்போல விழிக்கலானன்.

குடியானவனுக்கு எப்படியாவது படித்துவிட வேண்டும் என்று பிடிவாதம் உண்டாயிற்று. அதனால், அவன் இருபது முப்பது கண்ணாடிகள் வரையில் மாற்றி மாற்றிப் போட்டுப் பார்த்தான். எழுத்து அறிவில்லாமல் கண்ணாடியின் உதவியைக் கொண்டே படித்துவிடுதல் கூடுமா? கூடாதல்லவா? அவன் அசட்டுத்தனமாய் விழிக்க, அதைக் கடைக்காரன் கண்டான். அவன் தன் நண்பனுடன் மெல்ல, 'இம் மூடனுக்குப் படிக்கவே தெரியாதுபோலிருக்கிறது' என்றான்.

பாம்புச் செவி படைத்த அக் குடியானவன், 'ஆம் எனக்குப் படிக்கத்தான் தெரியாது; தெரிந்தால் உம்மை ஏன் கண்ணாடி கேட்கிறேன்?' என்று கோபித்துக் கொண்டான். கடைக்காரன் நகைத்து, அவனை அடித்துத் துரத்தினான். அப்பொழுதுதான் அக் குடியானவனுக்குப் படிப்பு என்பது இன்னதென்று தெரிந்தது. அவன், 'தன் முகத்திலுள்ள கண்கள் இரண்டும் கண்களல்ல. கல்வி அறிவுடைமையே கண்களாகும்' என்று அறிந்து கொண்டான்.

பிறகு அவன் ஊருக்குப்போய், அன்று முதல் கல்வி கற்கத் தொடங்கினான்.

25. 'கீழோ ராயினும் தாழவுரை'

சில வருஷங்களுக்கு முன் புதுக்கோட்டையில் ஒரு திவான் இருந்தார். அவர் தமது பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்க நல்ல ஆசிரியர் ஒருவர் வேண்டுமென்று, பத்திரிகையில் பிரசுரஞ்செய்தார். தஞ்சாவூரிலிருந்த ஒரு பண்டிதர் தமது யோக்கியதா பத்திரங்களை அனுப்பி, தம்மை ஆசிரியராக அமர்த்திக்கொள்ளும்படி வணக்கமாக எழுதிக்கொண்டார். திவான் அவருடைய கல்வி மிகுதியைக் கண்டு, மறுநாளே புதுக்கோட்டை வந்து வேலையை ஒப்புக்கொள்ளும்படி அவருக்கு எழுதிவிட்டார்.

பண்டிதர் அப்படியே புறப்பட்டு, குதிரை வண்டியில் ஏறி உட்கார்ந்தார். அது புறப்படுகிற சமயமாயிற்று. அப்போது ஒரு கிழவர் வந்து, 'வண்டியில் இடமிருக்கிறதா ?' என்றார். வண்டிக்காரன் 'இது தனி வண்டி உள்ளே இடமில்லை. பெட்டியில் உட்காரப் பிரியமிருந்தால், ஏறுங்கள்' என்றான். அவர் 'நல்லது' என்று, ஏறி உட்கார்ந்தார். வண்டி புறப்பட்டுவிட்டது.

சிறிது தூரஞ் சென்றதும், உள்ளே உட்கார்ந்திருந்த பண்டிதர் தாம்பூலந் தரித்துக் கொண்டார். அதைக் கண்ட கிழவர், சிறிது சுண்ணாம்பு தருகிறீர்களா ?' என்று கேட்டார்.

அதற்கு அவர் விடை ஒன்றும் தாராமல், தமது காரியத்தில் நோக்கமாக இருந்தார். கிழவர், 'ஐயா! உங்களைத்தானே கேட்கிறேன்! கொஞ்சம் சுண்ணும்பு' என்று கையை நீட்டினர்.

பண்டிதருக்குப் பெருங் கோபம் உண்டாகி விட்டது. 'என்ன, கிழவரே! உமக்குச் சிறிதும் ஞானமில்லை! உமக்குச் சுண்ணும்பு கொடுக்கத் தான் தனிவண்டி வைத்துக்கொண்டு வந்தேன் போலும்' என்று கடுகடுத்துச் சொன்னர்.

கிழவர், 'ஐயா! மன்னிக்க வேண்டும். தங்களுடைய பெருமையை அறியாது கேட்டு விட்டேன்' என்று சொல்லிச் சும்மா இருந்து விட்டார்.

கடைசியாக வண்டி புதுக்கோட்டை போய்ச் சேர்ந்தது. பட்டணத்துக்குள்ளே நுழைந்ததும், பண்டிதர் உத்தரவுப்படி வண்டி திவான் வீட்டு வாசலில் போய் நின்றது. அவ் வாசலில் காத்திருந்த சேவகர்கள் அனைவரும் கிழவரைக் கண்டு எழுந்து ஓடிவந்தார்கள். கைகட்டி வாய் பொத்தி நின்ருர்கள். பண்டிதரையோ ஒருவரும் கவனிக்கவில்லை.

பண்டிதர் வியப்புற்றுக் கிழவர் யாரென்று விசாரித்தார். அவ்வூர்த் திவான் அவர் என்று சொல்லக் கேட்டு, பண்டிதர் திடுக்கிட்டுப் போனர். தாம் முன்பு அவருக்குச் செய்த

பிழையை நினைத்து, நடுங்கினர்; உள்ளே சென்று அவர் காலில் விழுந்து மன்னிக்கும்படி வேண்டினர்.

திவான் அவரை நோக்கி, 'பண்டிதரே! நீதி நூல்களைப் படிப்பதனல் ஒரு பயனுமில்லை. படித்த அந் நூல்களில் கூறியபடி நடப்பதே பயனுடையது. உம்முடைய ஒழுக்கம் விரும்பத்தக்கது அன்று. ஆதலால், என் குழந்தைகளை உம்மிடத்தில் ஒப்படைக்க மாட்டேன். அவர்களுக்கும் உமது அகங்காரம் படிந்துவிடும்' என்ருர்.

பண்டிதர் வெட்கிப்போய் மன்னிப்புக் கேட்க, திவான் அவரை மன்னித்தார். தம் பிள்ளைகளை அவரிடம் ஒப்படைத்தார். பண்டிதர் பின்பு சகல நற்குணமு முடையவராகி, அக் குழந்தைகளையும் நல்ல குணமுடையவராகப் பழக்கினர். அதனல் சீடரும், குருவும் கீர்த்திபெற்ருர்கள்.

26. 'மூத்தோர் சொல்லும் வார்த்தை அமிர்தம்'

ஒருநாள் ஒரு கோழி தன் இளஞ் சேவற் குஞ்சை நோக்கி, 'அப்பா! நீ சிறியவன், உனக்கு உலக அனுபவம் போதாது. நான் சொல்லுகிறதைக் கேள். நீ அடிக்கடி கிணற்று

அடியில் போய் அதில் எட்டிப் பார்க்கிருய், அதனுல் உனக்கு மோசம் வரும்' என்றது. சேவல், 'அம்மா! நான் தெரியாமற் செய்து விட்டேன்? இனிமேல் அவ்வாறு செய்வதில்லை' என்று உறுதி கூறிற்று.

சில நாள் சென்றது. இந்த இளஞ் சேவல் தனித் திருந்து ஆலோசித்தது; இஃதென்ன பைத்தியம்! கிணற்றை எட்டிப் பார்ப்பதால் மோசம் என்ன? வயதானவர்களுக்கே சந்தேகம் மிகுதி. நாம் மிக்க ஜாக்கிரதையாக எட்டிப் பார்ப்போம்' என்று உறுதி செய்து கொண்டது. மறுநாள் கிணற்றுக்கு அருகே போய், மெல்லக் கழுத்தை நீட்டி, அதில் எட்டிப் பார்த்தது.

உடனே இதன் நிழல் மற்ருெரு சேவல் போல நீரில் தோன்றிற்று. அதைக் கண்டதும் இதற்கு ஜாதி இயல்பின்படி ரோஷம் உண்டாகிவிட்டது. கழுத்தின் ரோமங்களும் சிலிர்த்தன. அந்தப் பிரதி பிம்பமும் அப்படியே சிலிர்த்த ரோமத்துடன் தோன்றிற்று. உடனே சேவலுக்குக் கோபம் அதிகரித்தது. அதனேடு சண்டை போட இது கிணற்றிற் பாய்ந்தது. ஐயே! இதன் மடமையை என்னென்று சொல்வது.

ஜலத்தில் விழுந்து இது தபிக்கிறபோது, 'ஆ! என் தாயின் பேச்சைக் கேளாமற்

போனேனே! அவளைப் பார்க்கிலும் எனக்குப் புத்தி அதிகம் என்று எண்ணினேனே! அதன் பயனை இதோ அனுபவிக்கிறேன்' என்று புலம்பிற்று. அப்போது அக்கோழிக்கு உடையவனான குடியானவன் அங்குத் தெய்வாதீனமாக வந்தான். அவ்விளஞ் சேவலைக்கண்டு, வெளியில் எடுத்துவிட்டான். அதன் பிறகு, அச்சேவல் தனக்கு மூத்தவர் சொல்லைக் கடப்பதேயில்லை. அதனால் அது துன்பம் அடையாமல் சுகமாக வாழ்ந்தது.

27. 'செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்'

காசிப் பட்டணத்தி லிருந்து பிராமண வித்துவான் ஒருவன் தஞ்சாவூர் மகாராஜாவின் சபைக்கு வந்தான். அவன் அவர் சபையிலுள்ள வித்வான்களைத் தருக்கத்தில் எளிதில் வென்றான். அதனால், அரசர் அவனைத் தனது ஆஸ்தான வித்வானாக்கினார். அவன் சில நாளைக்குள் பெரும் பணக்காரனாயினான்.

அவனது நல்ல ஸ்திதியைக் காசியிலுள்ள அவன் உறவினர் கேள்வியுற்றனர்; 'ஐயோ! நமக்குத் தரித்திரம் வருத்துகிறதே! தேசாந்தரம் போயாவது பிழைப்போமா"? என்று தஞ்சாவூர் வந்தார்கள். அங்கு அவ் வித்வானைக் கண்டு, உறவு கொண்டாடினார்கள். அப்

புலவன் அவர்களை ஆதரிக்காது, ‘நீங்கள் யார்? உமக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?’ என்று கடுகடுத்துக் கூறினான்.

அக் காசிப் பிராமணர்கள் மனம் நொந்து போயினர். பின்பு அவர் அவ் வித்வானிடம் செல்லவில்லை. தஞ்சாவூரிலேயே தங்கி, வைதீகத் தொழில் செய்து, ஜீவித்து வந்தனர். இப்படிச் சிலகாலம் ஆயிற்று.

சில நாளைக்கு எல்லாம் தஞ்சாவூர் வித்வான்கள் எல்லாரும் ஒன்று கூடி, ‘பார்த்தீர்களா, இந்த வட நாட்டான் நம் ஊருக்கு வந்து, நமது பிழைப்புக்கு இடையூறு செய்கிறான். இவனை வஞ்சனையால் வெல்ல வேண்டும்’ என்று ஆலோசித்து, ஒரு முடிவு செய்தனர்.

அவர்களுள் ஒருவன் அம் முடிவுப்படி, அரசனிடம் சென்று, ‘இக்காசி வித்வான் பார்ப்பானல்லன்; பார்ப்பான் என்று பொய்சொல்லி, உம்மோடு ஒரு பந்தியில் உண்டுவந்திருக்கிறான்; இவன் இழிகுலத்தான்’ என்று கூறினன்.

மன்னன் வித்துவானை வருவித்து, விசாரித்தான். அவன், ‘ஐயோ! நான் பிராமணனாயினனே என்றனன். வேந்தன், ‘நீர் பார்ப்பானாக இருந்தால், அதை மெய்ப்பியும்’

என்றான். அதற்கு அக் கவிஞன், 'இவ்வூரில் வைதீகத் தொழில் செய்து ஜீவித்து வரும் காசிப்பிராமணர் என் சுற்றத்தார்; அவரை வருவித்து விசாரியுங்கள்' என்று சொன்னான்.

அவ்வாறே மன்னன் அவர்களை வருவித்துக் கேட்டான்; அவர்கள், இவ்வித்துவான் முன்பு தங்களை நிராகரித்ததை நினைத்து, 'இவனை எங்களுக்குத் தெரியாது; இவன் யாரோ?' என்று சொல்லிவிட்டனர். புலவன் நடுநடுங்கி, அவர்களை நோக்கி, 'ஐயோ! நீங்கள் என் சுற்றத்தவராக இருந்தும், என்னைச் சமயத்தில் கைவிடுகிறீர்களே!' என்றான்.

அவர்கள், 'ஓகோ! இப்போதுதான் உனக்கு நாங்கள் சுற்றத்தார் என்று ஞாபகம் வந்ததுபோலும்; நாங்கள் உனக்கு உறவினர் அல்லேம்' என்றனர். அரசன் இவ்விரு திறத்தார் பேச்சையும் கேட்டு, செய்தி என்ன என்று விசாரித்தான். அவர்கள் முன் நடந்த சங்கதியைச் சொன்னார்கள்.

121098

அரசன் 'ஓ வித்வானே! செல்வம் உடையவர்கள் ஏழையான தங்கள் உறவினரை ரக்ஷிக்க வேண்டும் என்று நீர் படித்திருந்தும், செல்வச் செருக்கால் அதை மறந்தீர். உமக்குத் தண்டனையாக உமது பொருளை இத்தனை

பேருக்கும் பங்கிட்டுக் கொடுப்பேன்' என்றான். பிறகு அவ்வாறே செய்து, வித்வானை அனுப்பி விட்டான்.

பின்பு, அப் புலவன் நற்புத்தியோடு, தன் சுற்றத்தாரைக் காத்து வந்தான்.

28. 'மன்னவர்க்கு அழகு செங்கோன் முறைமை'

பூர்வ காலத்திலே மனுச்சோழன் என்று ஓர் அரசன் இருந்தான். அரசன் எனப் பெயர் வாங்கி இருந்தான். அவனுக்கு நெடுங் காலமாகப் பிள்ளையே இல்லாமல் இருந்தது. பின்பு ஒரு பிள்ளை பிறந்தது. அப் பிள்ளைக்கு வீதி விடங்கன் என்று பெயர் இட்டான். அவன் தகப்பனிலும் பதின்மடங்கு நல்லவன். சகல கலைகளையும் உணர்ந்தவன். பெற்றோரிடத்து மிகுதியும் அன்பு உடையவன்.

அவன் ஒருகால் தகப்பன் உத்தரவு பெற்றுக்கொண்டு, கோவிலுக்குப் போனான். இரதத்திலேறிச் செல்லுகையில், தேரிலே கட்டிய குதிரைகள் மிக வேகமாகச் சென்றன. அத் தருணத்தில், தாய்ப் பசுவானது பின்னே வர, முன்னே சென்ற அதன் அழகுள்ள கன்று தேர்ச் சக்கரத்தின் கீழ் அகப்பட்டு, அரைபட்டுச் செத்தது.

இதைக் கண்ட வீதிவிடங்கன் நடுநடுங்கி, தேரிலிருந்து கீழே விழுந்து பரிதபித்தான்; பசுவின் கன்றைக் கொன்ற பாவி உயிருடன் இருக்கலாமா என்று, தன்னை வெட்டிக் கொள்ளப் போனான். அவனைச் சூழ்ந்து நின்ற சிலர் அவன் கையைப் பிடித்து, 'ராஜ புத்திரா! இக் கன்று உன் அஜாக்கிரதையினால் இறந்ததோ? அப்படி யொன்று மில்லையே. இதற்காக நீ உயிர்விடுவது உசிதமன்று. வேதத்தில் விதித்துள்ள பிராயச்சித்தங்களுள் இதற்குத் தக்கது எதுவோ, அதைக் கேட்டறிந்து செய்து கொள்ளு' என்றனர்.

ராஜ குமாரன் இதற்கு முதலில் இணங்கவில்லை. ஆனாலும் அருகில் உள்ளவர் வற்புறுத்தியதால் ஒருவாறு இணங்கினான். பிராயச்சித்தம் செய்துகொள்ளப் போனான்.

அவன் போன பிறகு, கன்றிழந்த தாய்ப் பசுவினால் மனுச்சோழன் நடந்த விஷயங்களை அறிந்து கொண்டான். அவனுக்கு உண்டான துக்கத்திற்கு அளவே இல்லை. தன் மகனை விசாரித்து, அவனைக் கொன்றுவிட வேண்டுமென்று தீர்ப்புச் சொன்னான். ஆனால் அவன் மந்திரிகள், 'மகாராஜனே! உமது புதல்வன் இத் தீய கருமத்தை வேண்டுமென்று செய்தவனல்லன். ஆதலால், அவனைக் கொலைசெய்தல் நியாய விரோதமாகும்' என்றனர்.

சோழன், 'மந்திரிகளே! உங்கள் நியாயம் நன்ரு யிருந்தது. கோ ஹத்தி செய்தவனைப் பிராயச்சித்தம் செய்து சேர்த்து வைத்துக் கொள்ளலாம் என்று சொல்வது வெகு அழகு! என் மகனுனபோதிலும், நியாயம் தவறேன். அவன் தேர்க்காலின் கீழ் அரைபட வேண்டிய வன்தான்' என்று மொழிந்தான்.

தான் நெடுங் காலம் தவஞ்செய்து பெற்ற பிள்ளை ஆயினனே என்று, அவன் சிறிதும் பார்க்கவில்லை; அக் குமாரனை வீதியிலே கிடத்தி, அவன்மீது தேரைச் செலுத்தினன்.

வீதிவிடங்கன் இறந்துபோனன். மனுச் சோழனும் உயிரை விடப்போனன். அப்போது கடவுள் தோன்றி, அவ்வரசன் நீதிதவருது அரசாட்சி செய்ததை மெச்சினர். இறந்து போன ஆவின் கன்றையும், வீதி விடங்கனை யும் பிழைப்பித்துத் தந்து, மறைந்தருளினர்.

எல்லாரும் களிப்பெய்தினர். தன் மகனுன போதிலும் குற்றஞ் செய்தமைபற்றித் தண் டித்த அச்சோழனது புகழ், இன்றைக்கும் நிலைத்திருக்கின்றது! இதுவே செங்கோன்மை.

29. 'மந்திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தல்'

மிக்வும் முரடனன ஒரு துருக்க வீரன் மழைக்காக ஒரு வீட்டுத் திண்ணையில் ஒதுங்கி யிருந்தான். அப்பொழுது அவன் பக்கத்திலே

ஒரு க்ஷயரோகியும் வந்து உட்கார்ந்தான். அந் நோயாளி தன் நோயின் கொடுமையால் துருக் கன் தடுக்கத் தடுக்க விகாரமாக இருமினன்.

அதைப் பொருத அம்மூடத் துருக்கன் கத்தியை உருவி, அவனை ஒரே வெட்டாக வெட்டிக் கொன்று போட்டான். இப் பாதகத் தைக்கண்ட வழிப்போக்கரில் சிலர் அத் துருக் கனைக் கட்டிப் பிடித்து, ராயர் முன்னர்க் கொண்டுபோய் விட்டனர்.

ராயர் அவனைப் பார்த்து, 'அடா துருக்கா! ஏனடா அவனை வெட்டினுய்?' என்று உறுக்கி வினவினர். அவன், 'சலாம் மகராஜ்! நான் இந்த மனிதனை இருமாதே இருமாதே என்று பல தரம் தடுத்தும், துஷ்டப்பயல், என் பேச் சைத் தள்ளிப்போட்டு இருமினன். அதனலே வெட்டிப் போட்டேன்' என்ருன். ராயர் கடுஞ் சினங் கொண்டு, 'இவனைச் சிரச்சேதஞ் செய்து போடுங்கள்' என்று உத்தரவிட்டார்.

உடனே பக்கத்தில் இருந்த அப்பாஜி, இவனை இப்போது கொல்லவேண்டாம்; இவன் நல்ல சமயத்திற்கு உதவுவான்' என்று சொல்லி, அவனைப் பிடித்துக் காவலில் வைத்தான்.

பின்பு அவனுக்கு நாள்தோறும் இரண்டு சேர்மாமிசமும், ஒரு சேர் நெய்யும், பின்னும் வேண்டிய சம்பாரங்களும் கொடுத்து, நன்ருகச்

சமையல் செய்து தின்று வரும்படி செய்தான். தின்று வரவே, சில மாதங்கள் ஆனதும், அவன் மிகவும் கொழுப்பு ஏறிப் போனான். முன்னிலும் பெரும் முரடனானான்.

இப்படியிருக்க, ஒருநாள் டில்லி பாக்ஷாவின் மந்திரி ஒருவன் ராயர்மேல் தண்டு எடுத்துப் புறப்பட்டு வந்து, தான் வந்த செய்தியை ஒரு தூதன் மூலம் ராயருக்குத் தெரிவித்தான். ராயர் கேட்டு நடு நடுங்கிப் போனார்; அப்பாஜியை வருவித்து, 'இதற்கு என்ன செய்யலாம்?' என்று கேட்டார்.

அப்பாஜி, 'நீங்கள் ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம்' என்று சொல்லி அவரை அனுப்பினான்; பிறகு, ஒரு கடிதத்தில், 'நான் மிகவும் பஞ்சை ஆயினனே; கொசுகின் மீது கருடன் சீறி வந்தாற்போல என்மேல் தாங்கள் படை திரண்டுவந்திருக்கிறீர்களே' என்று எழுதினான்; காவலில் வைத்திருந்த முரட்டுத் துருக்கனை அழைப்பித்தான். அவனுக்குச் சிறப்பான உடை தரிப்பித்தான். அவன் கையில் அக் கடிதத்தைக்கொடுத்தான். பாக்ஷாவின் மந்திரியிடத்துக் கொடுக்கும்படி அனுப்பினான்.

துருக்கன் கொண்டு போய்க் கொடுக்க, அம் மந்திரி, கடிதத்தை உடைத்துப் பார்த்தான். 'சீ! இந்த அற்பனிடத்தா சண்டைக்கு

வந்தோம்? அடா, பதரே!' என்று இகழ்ந்து, அக் கடிதத்தின் மீது காறி உமிழ்ந்தான்.

அம் முரட்டுத் துருக்கன் தன்னைத்தான் அவன் இகழ்ந்தான் என்று, மூர்க்கங்கொண்டு, தன் வாளை உருவி, அவனை வெட்டித் துணித்துப் போட்டான். பக்கத்தில் நின்ற அம் மந்திரியின் சேவகர்கள் அவனை உடனே பிடித்துக் கண்டதுண்ட மாக்கினர். இவ்வாறெல்லாம் நடக்கும் என்று அப்பாஜி எதிர்பார்த்திருந்தான். அதனால், அவன் ஒரு சிறிய படையுடன் எதிரி சேனையைத் தாக்கினான்.

அச் சேனை, தலைவன் இல்லாமையால் எளிதில் முறிந்து, ஓடிப் போயிற்று. பின் விளைவனவற்றை முன் உணர்ந்து உபாயம் செய்த அப்பாஜியின் புத்தி நுட்பத்தை ராயர் மெச்சிப் புகழ்ந்தார்.

30. 'தந்திரிக் கழகு தறுகணாண்மை'

சற்றேறக் குறைய இருநூற்றைம்பது வருஷங்களுக்குமுன் சிவாஜி என்றொரு மகா ராஷ்டிர வீரன் இருந்தான். அவன் மிகவும் துணிகரமுள்ளவன். அஞ்சா நெஞ்சமுடன் எதிரிகளைத் தாக்கும் ஆண்மை யுடையவன். அவனிடத்திலோ மிகுதியான சேனை இல்லை; சுமார் இருநூறு முந்நூறு வீரர் கொண்ட

ஒரு சிறிய படையே இருந்தது. அப் படையை வைத்துக்கொண்டு அவன் மிகவும் பெரும் படையையும் தாக்கி வென்று ஓட்டுவான்.

அவன் ஒரு தடவை மொகலாய சக்கரவர்த்தியான ஔரங்கஜீப் என்ற அரசனுக்கு உரித்தான சில மாகாணங்களைக் கொள்ளையடித்தான். அதனால் அச் சக்கரவர்த்தி அம் மகாராஷ்டிர வீரனைத் தண்டித்து வரும்படி ஒரு துருக்க வீரனை அனுப்பினான்.

அவ் வீரன் ஒரு பெருஞ் சேனையுடன் சிவாஜி வசித்த நாட்டிற்கு வந்தான். அதைக் கேள்வியுற்றான் சிவாஜி. அவ்வளவு பெரிய சேனைக்கும், அதன் தலைவனுக்கும் அவன் சிறிதும் அஞ்சவில்லை. ஒருநாள் இரவில் அத் துருக்கன் தங்கியிருந்த வீட்டில் நுழைந்து, அவனைத் தாக்கினான்.

சடிதியில் எதிர்க்கும் தன் பகைவனுக்கு அத் துருக்க வீரன் எதிர் நிற்க மாட்டாமல், ஒரு சாளரத்தின் வழியாக வெளியே தப்பி ஓடினான். சிவாஜி அவனை விடாமல் பின் தொடர்ந்து சென்று, தன் வாளினால் அவனை வெட்டினான்.

அவ் வெட்டுக்கு அவன் தலை தப்பிற்றேனும் விரல்கள் அகப்பட்டு அறுப்புண்டன. அவற்றை இழந்த அத்துருக்கவீரன் வீறிட்டுக் கொண்டு ஓடிப் போய்விட்டான்.

அவன் ஒழியவே, சிவாஜி அவன் சேனையைத் தாக்கி, அதைச் சின்னபின்னமாக முறியடித்தான். இதைக் கேள்வியுற்ற ஔரங்கஜீப் சக்கரவர்த்தி சிவாஜியை அஞ்சி, அவனைச் சுத்த வீரனாக மதித்தான். பின்பு ஒருகால் சம்மானமும் பண்ணினான்.

பிறகு அம் மகாராஷ்டிரவீரன் மேலும் பல துணிகரமான காரியங்களைச் செய்தான். எல்லாரும் மிக்க சூரன் என்றும், தக்க சேனைத் தலைவனென்றும் அவனைப் புகழ்ந்தனர். பின்பு அவன் மகாராஜா என்ற பட்டமுந் தரித்து நெடுங் காலம் வாழ்ந்தான். சிவாஜியை முன்னுக்குக் கொண்டு வந்தது அவனது அஞ்சாத துணிகரமல்லவா ?

31. 'குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்'

சோதிடத்தில் வல்லவரான ஒரு சாஸ்திரிக்கு ஒரு பெண் இருந்தாள். அவள் மிகவும் அழகனும், குணவானும், கல்வியாளனுமான ஒரு பிராமண குமாரனுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தாள். ஆனல் தனக்குப் பதினைந்தாம் வயதில் தன் புருஷனை இழக்க நேரும் என்று அவள் சோதிடம் கேட்டிருந்தாள். அக் கொடிய விதியை நினைத்து, அவள் தன் கணவனை எப்படிக் காப்பாற்றலாம் என்று



எப்போதும் சிந்தித்துக்கொண்டும், கடவுளை அன்போடு பூஜை செய்துகொண்டும் வந்தாள்.

இப்படி இருக்கையில், அம் மங்கைக்கு வயது பதினைந்து ஆயிற்று. அவள் தன் கணவனை ஒரு நிமிஷமேனும் விட்டுப் பிரியாமல் நிழல் போல அவனைத் தொடர்ந்தே சென்று வந்தாள். ஒரு நாள் இரவில் அந்தப் பிராமண குமாரன் குளக் கரைக்கு அவள் அறியாமல் சென்றான்; அங்கு அவன் கை கால் சுத்தி செய்துகொண்டு, கரை யேறினன் அப்போது அவனை ஒரு முதலை பிடித்துக். கொண்டது.

பார்ப்பானுக்குத் தன் உயிர்மேல் ஆசை இல்லை. அம் முதலை மிகவும் பசித்து இருந்தது. அதன் பசியையே பெரிதாகநினைத்தான். 'ஓ! முதலையே, உன் பசிக்கு என் சரீரம் உதவுவதை நோக்க எனக்கு மிகுதியும் சந்தோஷம் உண்டாகிறது. ஒன்றுக்கும் உதவாத என் உடம்பு உனக்கு ஆகார மாகட்டும். ஆனல், என் மனைவிக்கு இந்தச் செய்தியை அறிவிக்க வேண்டியது அவசியம். நான் போய்ச்சொல்லி விட்டு வருகிறேன். வரமாட்டேனென்று நீ எண்ண வேண்டாம். நான் வேதத்தை நன்கு அத்தியயனஞ் செய்தவன்; சொன்ன வாக்குத் தவறேன்' என்றான்.

முதலை 'சரி' என்று விட்டு விட்டது. அவன் சென்று, மனைவியின் இடத்து நடந்த விஷயங்களைக் கூறினான். அவள் 'போகக் கூடாது' என்று தடுத்தாள். பிராமணன் மிக்க பிரயாசையின் மேல், அவளிடத்திற் விடை பெற்றுக்கொண்டு, குளக்கரைக்குச் சென்றான்.

சாஸ்திரி குமாரி தன் கணவனைக் காப் பதற்கு என்ன செய்யலாம் என ஆலோசித் தாள்; ஓர் உபாயம் தோன்றிற்று. ஒரு மரக் காலில் விளக் கேற்றி வைத்துக்கொண்டாள். தன் பர்த்தா அறியாமல் அவனைத் தொடர்ந்து சென்றாள். வேதியன் குளக்கரை சேர்ந்ததும், முதலையை நோக்கி, 'இனி நீ என்னைத் தின்ன லாம்' என்றான்.

அது மிகவும் ஆவலோடு அவனைக் கவ் வப் போயிற்று. அப்போது சாஸ்திரி பெண் விளக்கை மரக்காலினின்றும் எடுத்தாள். முதலை பார்க்கும்படி காட்டினாள். அதை வாயால் ஊதி அணைத்தாள். அதைக் கண்டதும், அம் முதலை பிராமணனை விட்டுவிட்டது; 'ஓ! பிராமணா! உன்னை நான் தின்னப் போனேன். அப்போது உன் மனைவி விளக்கை அணைத் தாள். ஆகையால், நீ எனக்கு ஆகாரமாவ தற்கு உரியனல்லை. உன்மனைவி நல்ல குலத்து மங்கை. ஆதலால், உன்னைக் காக்க இந்த

உபாயஞ் செய்தாள். அவள் தீர்க்க சுமங்கலியாக வாழக்கடவள். நீ சுகமாக வீட்டுக்குப் போகலாம்' என்றது.

பார்ப்பான் மனம் வருந்தி, தன்னைத் தின்னும்படி அதைப் பல விதமாகக் கெஞ்சினான். என்ன கெஞ்சியும் அது கேட்கவில்லை. நீரில் மறைந்துவிட்டது. அதன்மேல், அவன் வீட்டுக்குச் சென்று, சுகமாகத் தூங்கினான்.

மறு நாள் விடிந்ததும், நடந்த செய்தி ஊரெங்கும் பரவிற்று. சகலரும் கேட்டு, சோதிடர் புதல்வியை மெச்சினார்கள். முதலை ஆசீர்வதித்தபடி அவள் நெடுநாள் கணவனோடு வாழ்ந்தாள். அவளுக்குப் பிள்ளைகளும் பிறந்தன. விசேஷமான செல்வத்தையும் அவள் அடைந்தாள்.

32. 'அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்'

பல வருஷங்களுக்கு முன் சிறந்த ஒரு புலவன் இருந்தான். அவன் பல நூல்களையும் தெளிவாகக் கற்றிருந்தான். ஆனால், அவன் சிறிதும் அடக்கம் இல்லாதவனா யிருந்தான்; ஊரூராகச் சென்று, ஆங்குள்ள புலவர்களை வாதில் வெல்லுவான். அவர்களைத் தனக்குச் சீடர்களாக இருந்து வணங்கும்படி செய்வான்.

ஒருநாள் அவன் சீரங்கத்தின் வீதிவழியே பல்லக்கிற் சென்றுகொண் டிருந்தான். அப்போது பட்டர் என்ற ஒரு சிறு பிள்ளையைக் கண்டான். அப்பிள்ளைக்கு வயது ஐந்து. அவனைப் புத்திசாலி என்று அங்குள்ளார் அவனுக்குச் சொன்னார்கள். புலவன், 'இப் பயலையா நீங்கள் புகழ்கின்றீர்கள்!' என்று சொல்லி நகைத்தான். பிறகு கர்வத்துடன் அச் சிறுவனை நோக்கி, 'உனக்கு என்னடா தெரியும்?' என்றான்.

சிறுவன் பல்லக்கின் அருகில் சென்றான்; அவன் பார்க்க மண்ணில் ஒரு பிடி அள்ளிப் பிடித்துக் கொண்டான். 'இதில் எத்தனை மண் உள்ளது என்று எனக்குச் சொல்லத் தெரியும்; நீர் சொல்லும் பார்ப்போம்' என்றான்.

அந்தப் பெரும் புலவன் அந்த மண்ணை எப்படி எண்ணிச் சொல்லுகிறது என்று மயங்கிப்போனான்; விடை ஒன்றும் தரமாட்டாமல் விழித்தான். பார்த்த அக் குழந்தை, 'சீ! நீதானா வித்வான்? இது சொல்ல முடியவில்லையே! ஒரு பிடி மண் என்று சொல்லத் தெரியாத உனக்கு இத்தனை ஆடம்பரமேன்?' என்று, அம் மண்ணை அவன் முகத்தில் விட்டெறிந்துவிட்டுப் போய்விட்டான்.

அப்பொழுதுதான் அவ் வித்வானுக்குக் கல்விச் செருக்கு அடங்கிற்று; 'அறிவுடையவருக்கு அழகு அடக்கமே' என்ற எண்ணமும் உதித்தது. பிறகு அவன் மிகவும் அடக்கமுள்ளவனானன்.

33. 'கல்விக் கழகு கசடற மொழிதல்'

சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன் புகழேந்தி என்றொரு புலவர் இருந்தார். அவர் 'நள வெண்பா' என்ற ஒரு நூலை இயற்றினார். அதனை அவர் புலவர் பலர்முன் படித்துக் காட்ட விரும்பினார். கம்பர், ஒட்டக்கூத்தர் முதலிய புலவர் பலர் கூடிய சபையில் அதைப் படித்துப் பொருள் கூறிவந்தார்.

ஒட்டக்கூத்தருக்கோ புகழேந்தி இடத்தில் பகை உண்டு. அதனால் அவர் புகழேந்தியின் பாடல்களில் குறைகள் சொல்லிக்கொண்டேவந்தார். புகழேந்தியார் அவற்றுக்குத் தக்க சமாதானம் கூறிக்கொண்டு வருகையில், ஒரு பாடலில் ஒரு விசித்திரமான கற்பனை இருந்தது. அதையும் ஒட்டக்கூத்தர் வீணே ஆக்ஷேபித்தார்.

என்னவெனில், அப் பாடலில், 'வண்டுகள் மல்லிகைப் பூக்களைச் சங்குகளாகக்கொண்டு, ஊதின' என்று இருந்தது. அது எல்லாருக்கும் பெரு மகிழ்ச்சியைத் தந்தது.

ஆனல் ஒட்டக்கூத்தர், 'ஓ! புலவரே! சங்கு ஊதுகிறவர்கள் அச் சங்கின் பின் புறத்தில் அன்ருே ஊதுவார்கள்? இவ் வண்டுகள் மல்லிகையின் முன் புறத்தில் அன்ருே ஊதுகின்றன. சங்கு ஊதுகின்றவர்களுக்கும் இவ் வண்டுகளுக்கும் எவ்வாறு உபமான உபமேயம் பொருந்தும்?' என்ருர்.

அதற்குப் புகழேந்தியார், 'வித்வானே! சங்கு ஊதுகிறவர்களும் கட்குடியர்கள், இவ் வண்டுகளும் கள் (மது) குடிப்பன. கள்ளுண்டு களிப்பார்க்கு முன்னும் பின்னும் தெரியாது. ஆகையால், வண்டுகள் குடி மயக்கத்தால் பூவின் முன்புறத்தில் ஊதின' என்ருர்.

ஒட்டக்கூத்தர் மகிழ்ச்சியடைந்தார். சபையோர் அனைவரும் புகழேந்தியார் சொன்ன தெளிவான சமாதானத்தை மெச்சினர்கள்.

34. 'அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்'

ஒரு கிராமத்தில் ஒரு கோமுட்டி இருந்தான். அவனுடைய பேச்சில் வெளிப்படையாக ஓர் அர்த்தமும், குறிப்பாக ஓர் அர்த்தமும் தோன்றும். அவனுடைய புகழ் எங்கும் பரவியிருந்தது. அரசன் காதிற்கும்கூட அஃது எட்டியிருந்தது.